# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 14 வள்ளுவர் ஆண்டு 2030 ஐப்பசி 21 ஞாயிற்றுக்கிழமை (07-11-1999) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 296


# புளியங்குளம் நகரில் நேற்று பெரும் சண்டை மூண்டது!

## கைப்பற்றிவிட்டதாக லண்டனில் புலிகள் அறிவிப்பு

வவுனியா, நவம்பர் 7

வன்னியில் கண்டி — யாழ்ப்பாணம் வீதியில் வவுனியாவில் இருந்து 15 மைல் தூரத்தில் உள்ள புளியங்குளம் நகரில் நேற்று படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் பெரும் மோதல் மூண்டது.

மாங்குளத்தில் இருந்து முன்னேறி கனகராயன்குளத்தையும் நேற்று மாலை புதூர் சந்தியையும் கைப்பற்றிய புலிகள் புளியங்குளம் நகர் மீது தாக்குதலை ஆரம்பித்துள்ளனர் என்று புலிகளின் குரல் வானொலி தெரிவித்தது.

புளியங்குளம் நகருக்கு தெற்கே படையினரும் வடக்கே புலிகளும் நிலை கொண்டுள்ளனர் என்றும் பெரும் சண்டை நடைபெற்று வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அதேசமயம் புளியங்குளம் புலிகளினால் கைப்பற்றப்

(16ஆம் பக்கம் பார்க்க)

## 5ஆவது நாளாக நடக்கும் சமர்

வவுனியா, நவ. 7

நேற்று ஐந்தாவது நாளாக ''ஓயாத அலைகள்-3'' இராணுவ நடவடிக்கை வெற்றிகரமாகத் தொடர்ந்ததாகப் புலிகளின் குரல் வானொலி தெரிவித்தது.

ரிவிபல நடவடிக்கை மூலம் கைப்பற்றப்பட்ட 134 சதுர கிலோ மீற்றர் பரப்புடைய ஒட்டுசுட்டான் பிரதேசம், 500 சதுர கிலோ மீற்றர் கொண்ட நெடுங்கேணிப் பிரதேசம், போர்க்கோஷம் நடவடிக்கை மூலம் கைப்பற்றப்பட்ட 365 சதுர கிலோ மீற்றர் பிரதேசம் வெற்றி உறுதி நடவடிக்கை மூலம் கைப்பற்

(16ஆம் பக்கம் பார்க்க)






## சார்க் மாநாடு ஒத்திவைப்பு

'சார்க்' உச்சி மாநாடு ஒத்திப் போடப்பட்டுள்ளதாக இலங்கை அறிவித்துள்ளது.

இந்த மாநாட்டை ஏற்கனவே திட்டமிட்டபடி இந்த மாதம் 26 ஆம் திகதி நடத்துவதா அல்லது வேண்டாமா என்பதில் ஏழு உறுப்பு நாடுகள் இடையே கருத்தொற்றுமை காணப்படாததால் மாநாடு ஒத்திப்போடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

## கப்பல் சேவை

யாழ்ப்பாணம், நவ. 7

காங்கேசன்துறையில் தரித்து நிற்கும் 'லங்கா முடித்த' கப்பல் மூலம் நாளை திங்கட்கிழமை திருகோணமலைக்கு பயணிகளை அழைத்துச் செல்ல ஏற்பாடாகி உள்ளதாக யாழ். சிவில் நிர்வாக அதிகாரி தெரிவித்தார்.

திருகோணமலைக்கு நாளை பயணம் செய்ய உள்ள பயணிகள் அனைவரையும் சகல பயண ஏற்பாடுகளுடனும் மதிய உணவுடனும் இன்று காலை 8.30 மணிக்கு யாழ். சிங்கள மகாவித்தியாலயத்துக்கு வருமாறு கேட்கப்பட்டுள்ளது.

அவர்களுக்கான 'டிக்கெட்'டுக்கள் உடனடியாக வழங்கப்பட்டு இன்றே அவர்கள் காங்

[16 ஆம் பக்கம் பார்க்க]

# வவுனியா நகரை நோக்கி புலிகள் முன்னேறுவதாக ரணில் எச்சரிக்கை!

## எதிரியை எதிர்க்க ஒன்று கூடுமாறு படையினரைக் கோருகிறார்

கொழும்பு, நவ. 7

தற்பொழுது வன்னியில் இடம்பெறும் தாக்குதல் நடவடிக்கை மூலம் விடுதலைப் புலிகள் வவுனியா நகரை நோக்கி முன்னேறி வருகின்றனர் என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க எச்சரிக்கை விடுத்துள்ளார். எதிரியை எதிர்க்க ஒன்று கூடுமாறு அவர் படையினருக்கு கோரிக்கை விடுத்தார்.

குருநாகல் மாவட்ட தண்டுவஸ்நுவெர என்ற இடத்தில் நேற்று நடந்த பொதுக்கூட்டம் ஒன்றில் பேசும் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

வன்னியில் இடம்பெற்று வரும் பெரும் மோதல்கள் குறித்து அரசினரும் ஜனாதிபதியும் பொறுப்பற்ற விதத்தில் செயற்பட்டு வருகின்றனர்.

சண்டை நடைபெறும் பகுதிகளில் உள்ள படையினரது நிலை குறித்து அறிந்து கொள்ளச் செல்லும் பெற்றோர்களும் உறவினர்களும் அலட்சியமாக நடத்தப்படுகின்றனர். அவர்களது மன வேதனை குறித்து எவரும் அக்கறை செலுத்துவது கிடையாது.

போரில் காயமடைந்து வவுனியா, அனுராதபுரம் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ள பெரும் எண்ணிக்கையான படையினருக்கு உதவுவதற்கு நாட்டு மக்கள் அனைவரும் முன்வரவேண்டும்.

அதேசமயம் — வவுனியா பகுதியில் தமிழர்களின் உடைமைகளுக்கு சேதம் விளைவிக்கப்பட்டமை கண்டிக்கப்பட வேண்டியது.

இப்படி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

சண்டை நடைபெறும் இடங்களில் இருந்து சிதறி ஓடும் படையினரை நோக்கி நான் பந்துகாபய மன்னனின் மண்ணில் இருந்து பேசுகிறேன் பிரிந்து போகாமல் ஒன்று சேர்ந்து எமது எதிரியை எதிர்த்துப் போரிடுங்கள்'' என்றும் ரணில் கேட்டுக்கொண்டார். (இ-6)

## வவுனியா சோபை இழந்தது மக்கள் மத்தியில் பதற்றம்

வவுனியா, நவ. 7

வவுனியாவில் பெரும் பதற்றமும் அச்சமும் நிலவுவதால் நகரப் பகுதியில் தீபாவளி வியாபாரம் சோபை இழந்து காணப்பட்டது.

வீதிகளில் படையினரின் வாகனங்கள் அடிக்கடி ஓடிக் கொண்டிருந்ததினாலும் படையின்ரின் நடமாட்டம் அதிகரித்திருந்ததினாலும் மக்களின் நடமாட்டம் குறைந்து காணப்பட்டது.

தொடர்ந்து நடைபெறும் யுத்தத்தினால் வவுனியா நகரத்தில் அச்சத்துடன் கூடிய அமைதி நிலவுகிறது என்று அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ-5-164)

## புலிகள் மழை போன்று ஷெல்களை ஏவுகின்றனர்!

### வவுனியா தப்பி வந்தசிப்பாய்கள் தெரிவிப்பு

விடுதலைப் புலிகள் ஷெல்களை மழை போல் ஏவி வருகின்றார்கள். அவர்களது கடும் தாக்குதல்களுக்கு முகம் கொடுக்கமுடியாத நிலையிலேயே நாம் பின்வாங்கி ஓடவேண்டி இருந்தது.

வன்னியில் போர் நடைபெறும் இடங்களில் இருந்து தப்பி ஓடி வவுனியாவுக்கு வந்து சேரும் படையினர் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

புலிகளின் கடும் ஷெல் தாக்குதல்கள் மழை போன்று வந்து வீழ்கின்றன. பாதுகாப்பான பதுங்கு குழிகளில் இருந்தாலும் அவற்றால் புலிகளின் ஷெல் தாக்குதல்களுக்கு ஈடு கொடுக்க முடியவில்லை.

இராணுவ நிலைகளை சுற்றி வளைக்கும் புலிகள் அவற்றை நோக்கி மோட்டார் தாக்குதல்களை நடத்துவதுடன் நெருங்கி நின்று ஆர். பி. ஜி. ஷெல் தாக்குதல்களையும் நடத்திவருகின்றனர்.

காயமடைந்தவர்களைக் கூட மீட்கமுடியாத நிலை உள்ளது. ஹெலி தரை இறங்கி காயமடைந்தவர்களை காப்பாற்ற முயன்றால் ஹெலியை நோக்கியும் புலிகள் கடும் தாக்குதல்களை நடத்துகின்றனர். —என்று தெரிவிக்கப்பட்டது.

## 402 படையினர் சடலங்கள் புலிகளினால் தகனம்!

### செஞ்சிலுவைக் குழுவிடம் தெரிவிப்பு

வவுனியா நவ. 7

வன்னியில் ''ஓயாத அலைகள்-3'' நடவடிக்கையின் போது கொல்லப்பட்ட படையினரில் 402 படையினரின் சடலங்கள் தம்மால் தகனம் செய்யப்பட்டுள்ளதாக புலிகள் அறிவித்துள்ளனர் என்று செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் பேச்சாளர் ஹர்ஷா குணவர்த்தன தெரிவித்தார்.

இந்தச் சடலங்களைப் படையினர் பொறுப்பேற்றுக் கொள்ளாததை அடுத்தே அவை நேற்றுமுன்தினம் தகனம் செய்யப்பட்டுள்ளன என்று புலிகளின் குரல் வானொலி அறிவித்தது.

அதேவேளை-

புலிகளால் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவிடம் கையளிக்கப்பட இருந்த 36 படையினரின் சடலங்கள் மிகவும் பழுதடைந்து விட்டதனால் புலிகளால் அடக்கம் செய்யப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது (இ-6-க)

## சிப்பாய்களுக்கு எதிராக புளொட்டிடம் முறையீடு

வவுனியா, நவ. 7

வன்னியில் மோதல்கள் இடம்பெறும் பகுதிகளில் இருந்து தப்பி ஓடி வவுனியாவுக்குவந்த படையினரில் சிலர் வவுனியா நகரப்பகுதிக் கடைகள் சிலவற்றில் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர் என்று வவுனியா வர்த்தக சங்கத்தினால் புளொட் அமைப்பிடம் முறையிடப்பட்டுள்ளது.

புளொட் அமைப்பின் வவுனியா மாவட்டப் பொறுப்பாளர் சந்திரமோகன் இந்தத் தகவலை வெளியிட்டார்.

ஒருகடையில் இருந்து மட்

[16 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# அல்லியின் வாழ்த்துகள்


சந்திரன் வரவு கண்டு அல்லி அவள் மலர்கின்றாள்
அல்லி சில்க்ஸ் புடைவை தரம் கண்டு
மங்கை மனம் மகிழ்கின்ற வேளை—
புலரும் தீபாவளி மலரும் நினைவுகளுடன்
புதுப்பொலிவு பெற
அல்லியின் பூரிக்கும் வாழ்த்துகள்

## அல்லி சில்க்ஸ்

106, பெரியகடை, யாழ்ப்பாணம்.

(70772)


# 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 07 | 11 | 1940 — மறைவு 06 | 11 | 1996

## வேலுப்பிள்ளை திரவியம் ஜோர்ஜ்

ஆண்டுகள் மூன்று பறந்தோடிப் போனாலும் என்றும் உங்கள் நினைவுடன் வாழும்,

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், சகோதரர்கள்.

பாடசாலை வீதி,
ஆறுகால் மடம்,
ஆனைக்கோட்டை.

[70775]

# ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 26 — 07 — 1946 — உதிர்வு 12 — 11 — 1993

அமரர்

## கணபதிப்பிள்ளை கமலானந்தன்

(ஓய்வு பெற்ற புகையிரத உத்தியோகத்தர்)

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

குடும்பத்தினர்

கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.

[70774]

# மரண அறிவித்தல்

## இராமலிங்கம் இராஜகுலசிங்கம்

சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரியை வசிப்பிடமாகவுங் கொண்ட சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவருமான இராமலிங்கம் இராஜகுலசிங்கம் அவர்கள் 06 – 11 – 99 ஆம் திகதி சனிக்கிழமை அதிகாலை காலமாகி விட்டார்.

அன்னார் ஞானேஸ்வரியின் அன்புக் கணவரும், ஜெயப்பிரவின் [கனடா], ராஜ்பிரமீலன் ]கொழும்பு, ராம்பிரஜீவன் ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம்.

தகவல்:
இ. ராம்பிரஜீவன் [மகன்]
மு. சிறிதரன் (J.S.T.)
(மைத்துனர்)

'சக்தி',
தபாற் கந்தோர் வீதி,
சாவகச்சேரி.

# இந்துப் பேரவை தீபாவளி தினச்செய்தி

யாழ்ப்பாணம், நவ. 7

இன்று கொண்டாடப்படும் தீபாவலியை ஒட்டி வடபிராந்திய இந்துப் பேரவை செய்தி ஒன்றை விடுத்துள்ளது:-

அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

தீபாவளித்திருநாள் ''தீபத்திருநாள்'' இருள் சூழ்ந்த உலகில் அன்று ஒளி கிடைத்த பெருநாள். அசுரத்தனங்கள் கொடுமைகள் நீங்கிய நாள் அத்தகைய நன்னாளில் மாந்தர்கள் ஒவ்வொருவரும் தம்முள் உள்ள தீய பழக்கங்களைக் கைவிட்டு நல்லபடி வாழப்பழக வேண்டும் ஒவ்வொரு மனிதரும் நல்லவராக மாறினால் உலகில் நன்மைகள் விளைந்து பிரச்சினைகளற்ற தார்மீக சமுதாயம் மலரும். பொதுவாக மாந்தர்கள் மது மாமிச பழக்க வழக்கங்களைக் கைவிடவேண்டும் உண்மை அகிம்சை ஆகிய நற்பண்புகளைக் கைக்கொள்ள வேண்டும். ஆனால் பலர் தீபாவளித் திருநாளில்தான் மது மாமிசங்களை விசேடமாக அருந்தவும் புசிக்கவும் முனைகிறார்கள். மாமிசம் ஒருவனது உடலில் உக்கிரகுணங்களை மேம்படுத்தும் மது அவனது மதியை மயக்கி துர்ச்செயல்களில் ஈடுபட வழிவகுக்கும். இது எமது சமய சாஸ்திரங்களில்மட்டுமல்ல மேலைநாட்டு நவீன விஞ்ஞான மருத்துவ கண்டுபிடிப்புக்களின் மூலம்கூட நிரூபிக்கப்பட்ட உண்மையாகும். எனவே சாதாரணமாகவும் விசேடமாகபுனிதமான தினங்களிலும் மதுமாமிசங்களை விலக்குவதும் அகிம்சை, உண்மை ஆகிய நற்பண்புகளைக் கைக்கொள்வதுமே உண்மையான சமய நல்வாழ்

(15ஆம் பக்கம் பார்க்க)


திரைப்பட ரசிகர்களுக்கு
S. T. R பிலிம்ஸ்
தாபனத்தாரின்
தீபாவளி வாழ்த்துக்கள்

**ராஜா**
யாழ்ப்பாணம்

ரஜனி - ரோஜா
மற்றும் பலர் நடித்த

**உழைப்பாளி**

10-30, 2-00, 5-00
(சி/9679)

**லிபேட்டி** அச்சுவேலி.
அஜித் சுபலக்ஷ்மி
**ஆசை**
9-30
கமல் - ரேவதி
**தேவர் மகன்**
காட்சிகள்/ 12-30, 3-30
T.P.No. 070-212223
070 - 212678
(70541)

**நாகம்ஸ்**
சுன்னாகம்
இன்று முதல்
தீபாவளி வெளியீடு
விஜய் — சாளினி
மணிவண்ணன் - வடிவேலு
மற்றும் பலர் நடித்த

**காதலுக்கு மரியாதை**

காட்சிகள்:
11-00, 2-30, 5-15
(புதிய நேரம்)
(சி/9742)

தீபாவளியை
குதூகலமாக ஆரம்பிக்க
**மூர்த்தியின்**
முத்தான
ஓடியோ CD
வெளியீடு

◆ நண்பா
◆ சினிமா சூட்டிங்

எம்மால் CD மூலம் பதிவு செய்யப்பட்ட அழகிய வர்ணக் கவர்களுடன் பழைய புதிய பாடல்கள் பக்திப் பாடல்கள் அனைத்தையும் தரமான பிரதிகளில் பெற்றுக்கொள்ளலாம்.

★ உங்களது திருப்தியே எங்களின் வெற்றி

**மூர்த்தி வீடியோ சென்ரர்**
மானிப்பாய்.
T.P. 2884


# மரண அறிவித்தல்கள்

## திருமதி நவரத்தினம் இராசமலர்

கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நவரத்தினம் இராசமலர் நேற்று (6-11-99) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கனகசபை நவரத்தினத்தின் (கே.கே எஸ் றோட், நகை வியாபாரி) அன்பு மனைவியும் ஜெயரத்தினம் (டென்மார்க்), துரைரத்தினம் (சாலைப் பரிசோதகர் வ.பி.போ.ச), அழகரத்தினம், தர்மரத்தினம் (நகை வியாபாரி), பிரேமரத்தினம் (டுபாய்), புஷ்பராணி, தங்கராணி ஆகியோரின் அன்புத்தாயாரும் சேமபராபரம் (நல்லூர் ப.நோ.கூ.ச.), தயாநிதி (திவ்வியா ஜுவல்லறி), காலம் சென்ற நாவற்குழி சர்வேஸ்வரி மற்றும் தயாமதி, கோமதியம்மா ஆகியோரின் அன்பு மாமியாரும் விவீதா, எழில்தா (யாழ். இந்துமகளிர் கல்லூரி மாணவிகள்), ஆதீதன் (யாழ். மத்திய கல்லூரி), கரன்ராஜ், டுசாலா, ரேணுகா, சுதர்சினி, சுபாஷினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (7-11-99) ஞாயிற்றுக்கிழமை பகல் 1.00 மணி அளவில் அன்னாரின் (சொர்ணவடலி, கொக்குவில் மேற்கு) இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ந. துரைரத்தினம்
(மகன்)

சொர்ணவடலி,
கொக்குவில் மேற்கு.

(70967)

## K. T. செல்லத்துரை

வரியப்புலம் சுன்னாகத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட தாண்டவி செல்லத்துரை அவர்கள் 5-11-99 அன்று திருகோணமலையில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசம்மாவின் அன்புக் கணவரும் கேசரத்தினம் [முன்னாள் வீதிப்பரிசோதகர், இ. போ. ச.], சிறீதரன் [பொறியியலாளர்], புனிதவதி [டாக்டர், திருகோணமலை தளவைத்திய சாலை], பாஸ்கரன் [தொழில்நுட்பவியலாளர், கொழும்பு], ஆகியோரின் அன்புத் தந்தையும் லீலாவதி, அம்பிகா, கருணாகரன், மங்களா ஆகியோரின் அன்பு மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று [6-11-99] சனிக்கிழமை மாலை 5 மணிக்கு திருகோணமலையில் அன்னாரின் மகளின் இல்லத்தில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
M. சின்னத்துரை (மைத்துனர்)
P. மனமோகன் (மருமகன்)

வரியப்புலம்,
சுன்னாகம்.

(70779)

## திருமதி சகுந்தலாதேவி இராஜகிருஷ்ணர்

யாழ்ப்பாணம் தலையாழியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சகுந்தலாதேவி இராஜகிருஷ்ணர் 06 - 11 - 99 அன்று கொழும்பில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இராசரத்தினம் தில்லை நாயகி ஆகியோரின் சிரேஷ்ட புத்திரியும் காலஞ்சென்ற கந்தையா, தங்கச்சிப்பிள்ளை (புன்னாலைக் கட்டுவன்) ஆகியோரின் அன்பு மருமகளும் இராஜகிருஷ்ணர் (இளைப்பாறிய சினிமா லிமிட்டெட் பரிசோதகர்) அவர்களின் பாசமிகு மனைவியும் நீலாயதாட்சி, ஞானகாந்தன். கதிர்காமஜோதி ஆகியோரின் அன்புச் சகோதரியும் பாஸ்கரன் (Dip in Agri, டென்மார்க்), கருணாகரன் (பொறியியலாளர் M Sc. Ph D லண்டன்). சேகரன் (M Sc. Ph D, தென் ஆபிரிக்கா), சுகந்தி (Dip in English, பாஹ்ரேன்), பிரபாகரன் (விஞ்ஞான பீடம், 3 ஆம் வருடம்) ஆகியோரின் அன்புத் தாயாரும் சிவசக்தி, சிவாஜினி (M Sc , Ph. D), சிவகுமார் (பொறியியலாளர்), சிவகங்கா ஆகியோரின் அன்பு மாமியாரும் ரூபன். ஆதீனா, வர்ஷன், நிதுர்ஷன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் காலஞ்சென்ற தம்பிமுத்து (ஆசிரியர்) மற்றும் தியாகராசா (இலங்கை வங்கி), இராசரத்தினம் (பதிவாளர், மாவட்ட நீதிமன்றம், மல்லாகம்) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் கொழும்பில் 10 - 11 - 99 புதன்கிழமை நடைபெற்று தகனக் கிரியைக்காக பூதவுடல் கல்கிசை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
இ. பிரபாகரன்
(மகன்)

41A, E A. Cooray Mawatta,
Wellawatte.
T. P. 01 - 590162

(70784)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## மனதின் ஒளி

இந்துக்களின் முக்கிய திருநாள்களில் தீபாவளியும் ஒன்று. சமயத் திருநாள்களில் மிக மிகப் பலவும் மனித வாழ்க்கை முறையை நல்வழிப்படுத்தும் தத்துவங்களை அடிப்படையாகக் கொண்டு எழுந்தவையே.

மற்றவர்களுக்குத்தீமைவிளைவிப்பதும் அவர்களின் உரிமைகளை மறுப்பதும் அதர்மம். அதர்மம் தலையெடுத்தால், தாண்டவமாடினால் நீதி செத்துப்போகும். நீதி செத்தால் நல்லவன் கெட்டவனுக்குத் தலை வணங்க நேரிடும். அக்கிரமம், அநியாயம், அநீதி, ஆணவம், அடக்குமுறை என்பன அழிவுக்கே வித்திடும். அவை அழிக்கப்படவேண்டியவையே.

அதர்மம் அது எந்த வகையினதானாலும் அது அசுரனாகஉருவகிக்கப்படுகிறது. தர்மம் தெய்வமாக உருவகிக்கப்படுகிறது. அசுரன் மக்களைக் கொடுமைப்படுத்தும்போது தெய்வம் அல்லது தெய்வத்தின் மறு வடிவம் எனக் கருதப்படும் மனிதன் ஆணவம் கொண்ட அசுரனை வதம் செய்து தர்மத்தை நிலைநாட்டுகிறான்.

இந்தக்கருப் பொருளை அடித்தளமாகக் கொண்டபல புராண, இதிகாசக் கதைகளைபபடிக்கின்றோம். அவற்றில் சில, திருநாள்கள், திருவிழாக்களின் மூலாம்சங்களாக விளங்குவதை அவதானிக்கலாம் விஜயதசமி, தீபாவளி ஸ்கந்தசஷ்டி என்று பட்டியல் மிக நீளமானது.

அதர்மத்தை தர்மம் சங்காரம் செய்யும் கதைகளில் அசுரனின் ஆணவமும் அகங்காரமும் மமதையுமே அவனைக் கொடியவனாக்குகின்றன. தர்மம் என்றகடவுளிடம்இருந்து பெற்ற வரங்களின் பலத்தினாலேயே அவனுக்கு ஆணவம் பிறப்பதையும் காண்கின்றோம். எதுவானாலும் இறுதியில் தர்மம் அதர்மத்தை அழித்துவிடுகிறது.

இன்றைய உலகில் கடவுளிடம் வரம் பெறாமலேயே எங்களில் பலரும் பல அசுரத்தனங்களை தமது பலமாக்கிக்கொள்கிறார்கள். பொறாமை, நயவஞ்சகம், கபடத்தனம், கயமை, பொய் பேசுதல், மோசடி செய்தல், ஏமாற்றுதல், போலியான புகழ் தேடுதல் என்பனவும் அசுரத்தனங்களே. இவற்றை ஆயுதங்களாகப் பயன்படுத்தி மற்றவர்களுக்குக் கொடுமை செய்கிறார்கள்; அநீதி விளைவிக்கும் அதர்மமும் போக்கும் இப்போது சமூகத்தில் மலிந்துவிட்டன.

மேற்சொன்ன அதர்மங்களை இனங்கண்டு அகற்றுவதற்கு ஒவ்வொருவர் மனதிலும் ஒளி வேண்டும். மனிதன் தனக்குள்ளே உள்ள அசுரத்தனத்தை, அரக்க புத்தியை நீக்கும் போது அவன் மனதில் தானாகவே ஒளி பிறக்கிறது.

அசுரத்தனத்தைப் போக்குவது என்பது கெட்ட குணவியல்புகளை அகற்றுவது போலவே. நல்ல குணவியல்புகளை எமதாக்கிக் கொள்வதும் ஆகும். இன்றைய சூழ்நிலையில் அடுத்தவனின் துன்பத்தை, வேதனையை உணர்ந்து அவற்றைப் போக்க உதவும் மனித நேயமும் அடுத்தவனுக்குக் கொடுமை செய்யாதிருக்க வழி நடத்தும் மனித நீதியும் மிக அவசியமாகின்றன.

மனித நேயமும், மனிதாபிமானமும் மனதுக்கு ஒளி ஊட்டுவன. இன்றைய சூழ்நிலையில் — ஈழத்தமிழர்கள் வாழும் இக்கட்டான, இன்னல்கள் நிறைந்த சூழ்நிலையில்— மனித நேயமும் மனித நீதியும் ஒவ்வொருவர் மனதிலும் மலர வேண்டும்; ஒளிர வேண்டும்.

எங்களைவிட வசதி இல்லாதவனுக்கு, வளம் இல்லாதவனுக்கு, வாய்ப்புக் குறைந்தவனுக்கு உதவுகின்ற, நொந்து போயுள்ளவனுக்கு உதவுகின்ற மனித நேயத்தை வளர்க்க முயலுங்கள். அதுவே உங்கள் மனதின் ஒளி சேர்க்கும். தீபாவளி நாளின் சங்கற்பமாகவும் அதுவே அமையட்டும்!

# வடமராட்சியில் 4 பாடசாலைகளில் நாளை தீபாவளிக் கலை நிகழ்ச்சி

### பாரம்பரிய முறைப்படி கொண்டாட்டம் நடைபெறும்

நெல்லியடி, நவ. 7

பருத்தித்துறைச் கல்விக் கோட்டத்தின் கீழுள்ள 21 பாடசாலைகளைச் சேர்ந்த 7 ஆம் ஆண்டு மாணவர்களின் தீபாவளி விழா நாளைதிங்கட்கிழமை காலை நான்கு பாடசாலைகளில் நடைபெறவிருக்கின்றது.

இந்து சமய மாணவர்கள் 952 பேரும், கிறிஸ்தவ மாணவர்கள் 125 பேரும் கலந்துகொள்ளும் இவ் விழா வல்வெட்டி சிதம்பராக் கல்லூரி, பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை, புற்றளை மகாவித்தியாலயம், வடஇந்து மகளிர் கல்லூரி ஆகிய நான்கு பாடசாலைகளில் காலை 9மணிக்கு ஆரம்பமாகும்.

இவ் விழாவில் மாணவர்களினால் பாரம்பரிய உணவுப் பண்டங்கள் பரிமாற்றம் செய்தல், பாரம்பரிய முறையில் கோலமிட்டு, தோரணம் கட்டுதல், உட்பட தீபாவளிச்சடங்கும் செய்வித்து காண்பிக்கப்படும் கலைநிகழ்ச்சிகளும் இடம் பெறும். (ஐ-109-15-173)

## யாழ். ஆயர் விடுத்துள்ள தீபாவளிச் செய்தி

தீபாவளித் திருநாளை ஒட்டி யாழ். ஆயர் விடுத்துள்ள செய்தி இது:-

தீபாவளித் திருநாளைக் கொண்டாடும் மகிழ்ச்சிகரமான இந்தத்தினத்தில் அனைத்து சைவ மதச் சகோதரங்களுக்கும் எமது மகிழ்ச்சிகரமான வாழ்த்துகள்.

நன்மைக்கும் தீமைக்கும் நடந்த புராணபோராட்டத்தில் நன்மையின் வெற்றியை நினைவு கூருவதில் இவ்விழாவின் அர்த்தம் உள்ளதை அனைத்து சைவ மதச் சகோதரங்களும் உணர்வர். இப் போராட்டத்தை வரலாற்று ரீதியில் நாம் கண்டுகொண்ட போதிலும் மானிட மனதினில் நடைபெறும் போராட்டமே.

அன்பு பொறுமை உள்ளது. நன்மை செய்யும், பொறாமைப்படாது, தற்புகழ்ச்சி கொள்ளாது, இறுமாப்பு அடையாது, இழிவானதைச் செய்யாது, தன்னலம் நாடாது, எரிச்சலுக்கு இடம்கொடாது, தீங்கு நினைக்காது. அன்பு தீவினையில் மகிழ்வுறாது, மாறாக உண்மையில் அது மகிழும், அனைத்தையும் அது பொறுத்துக் கொள்ளும், அனைத்தையும் நம்பும் என்று அன்பை வரையறுக்கின்றது விவிலியம்.

தொடர்ந்து வரும் இனவாதப் போரினால் தமிழ் மக்கள் சொல்லொண்ணாத அவலங்களை அனுபவிக்கிறார்கள். துன்பப்படும் மக்களையும் திருநாள் தினத்தில் நினைக்க வேண்டும். 'நன்மனம் படைத்தவருக்கு சமாதானம்' 21 ஆம் நூற்றாண்டுக்குள் காலடி வைக்கின்ற எமது மக்களின் வாழ்வியற் புலத்தில் அமைதி உருவாக அனைத்து பேதங்களையும் கடந்து ஒன்று சேர்ந்து உழைக்க தீபாவளித் தினத்தில் திடசங்கற்பம் எடுப்போம்.

இறை பணியில் உங்கள் ஆயர்

பேரருள் திரு.
தோமஸ் சௌந்தரநாயகம்
யாழ். ஆயர்

## அகதி முகாமுக்கு கூரைத் தகரங்கள்

நெல்லியடி. நவ. 7

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவிலுள்ள அகதி முகாம்களுக்கு கூரைத் தகடுகள் வழங்கப்பட்டுள்ளன.

பலாலி, மயிலிட்டிப் பகுதியிலிருந்து இராணுவ நடவடிக்கைகளினால் பாதிக்கப்பட்டு, பருத்தித்துறையிலுள்ள சுப்பர்மடம், திக்கம், முனை, பொலிகண்டி ஆகிய இடங்களில் மக்கள் தங்கியுள்ள முகாம்களின் கூரைகளை வேய்வதற்காகவே, மீள்குடியமர்வு அதிகாரசபையினால் இந்தக் கூரைத்தகடுகள் வழங்கப்பட்டன. (ஐ-109)

## கந்தஷஷ்டி விரதாரம்பம்

கொழும்புத்துறை. நவ. 7

யாழ். குடாநாட்டில் உள்ள முருகன் ஆலயங்கள் பெரும்பாலானவற்றில் நாளை திங்கட்கிழமை காலை கந்தஷஷ்டி விரதம் விசேட அபிஷேகம் பூசை ஆராதனைகளுடன் ஆரம்பமாகின்றது.

இன்னும் சில ஆலயங்களில் செவ்வாய்க்கிழமையும் கந்தசஷ்டி விழா ஆரம்பமாகிறது.

அனேக ஆலயங்களில் பூசை முடிவில் தினசரி கந்தபுராணப் படிப்பும், பயன் சொல்லலும் இடம்பெறும். (ஐ-30)

## சைவப் பெரியார் காலமானார்

சைவத் தமிழ் அறிஞர் இணுவில் வை. கதிர்காமநாதன் உபாத்தியாயர் தமது 93 ஆவது வயதில் கடந்த புதன்கிழமை இறைபதம் எய்தினார்.

வடமொழி, ஆங்கிலம், தமிழ் ஆகியவற்றில் மிகுந்த புலமையும் புராண படனத்தில் ஆற்றலும் மிக்கஇவர் பல சமய நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார். இவர் இணுவில் இந்துக் கல்லூரியின் ஸ்தாபகர் குடும்பத்தவரான அமரர் ''முத்தமிழ் வித்தகர் அம்பிகைபாகரின் பேரனுமாவார். யாழ். இந்துக் கல்லூரி பழைய மாணவராகிய இவர் சிறந்த உபந்நியாசகராக விளங்கியவர்.

இவரிடம் கற்றபலர் தமிழையும் சைவத்தையும் வளர்க்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர். (இ)

## தாய்மாருக்கு நுளம்பு வலை

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் உள்ள ஐந்து வைத்தியசாலைகளில் குழந்தைகளைப் பிரசவிக்கும் தாய்மாருக்கு நுளம்பு வலைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

மந்திகை மருத்துவமனை, அம்பன் மத்திய மருந்தகம், மருதங்கேணி அரசினர் மருத்துவமனை, கரவெட்டி மத்திய மருந்தகம், வல்வெட்டித்துறை மாவட்ட மருத்துவமனை ஆகிய வைத்தியசாலைகளில் குழந்தைகளைப் பிரசவிக்கும் தாய்மாருக்கே இந்த நுளம்பு வலைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

(ஐ-109)

## தேடுதல்

அரியாலை, நவ. 7

கொழும்புத்துறை மேற்கு, பாஷையூர் மேற்கு ஆகிய பகுதிகள் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை காலை இராணுவத்தினரால் சுற்றி வளைக்கப்பட்டு தேடுதல் மேற்கொள்ளப்பட்டது.

கொழும்புத்துறை மேற்கு, சுவாமியார் வீதி மற்றும் பாஷையூர் மேற்குப் பகுதியில் உள்ள மக்களின் அடையாள அட்டைகள் படையினரால் சோதனையிடப்பட்டன.

(ஐ-17)

# பயணப் பாதுகாப்பு அனுமதி வழங்கப்பட்டவர்களின் விவரம்

யாழ்ப்பாணம், நவ. 7

யாழ். குடாநாட்டில் இருந்து வெளி இடங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் பெயர் விவரங்கள் உதயனில் வெளியாகி வருவது தெரிந்ததே.

பயண அனுமதி வழங்கப்பட்டவர்களின் (இம் மாதம் 5 ஆம் திகதி வரை) பதிவு இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாக வருமாறு:-

**சங்கானை**

(119376ஏ), (121475ஏ), (121475பி), (121657ஏ), (121839ஏ), (121845ஏ), (121845பி), (123400ஏ), (123400பி).

(123430ஏ), (123504ஏ), (123504பி), (123581ஏ), (123608ஏ), (123611ஏ), (123612ஏ), (125157ஏ), (125240ஏ), (125269ஏ), (125325ஏ), (125325பி), (125408ஏ), (125511ஏ).

**சாவகச்சேரி**

(117542ஏ), (120864ஏ), (120865ஏ), (120965ஏ), (120966ஏ), (120972ஏ), (123256ஏ), (123258ஏ), (123258பி).

(123276ஏ), (123276பி), (123276சி), (123276டி), (123286ஏ), (123286பி), (123286சி), (123292ஏ), (123293ஏ), (123293பி), (123297ஏ).

(123297பி), (123297சி), (123302ஏ), (123306ஏ), (123306பி), (123311ஏ), (123318ஏ), (123318பி), (123327ஏ), (123327பி), (123328ஏ), (123328பி), (123331ஏ), (123337ஏ), (123339ஏ), (126134ஏ), (120988ஏ), (120988பி), (123669ஏ), (123669பி), (123669சி), (126011ஏ), (126011பி), (123703ஏ), (123703பி).

**யாழ்ப்பாணம்**

(117593ஏ),

**கரவெட்டி**

(120005ஏ), (120005பி), (120108ஏ), (120108பி), (120115ஏ), (120115பி), (120115சி), (120119ஏ), (120119பி), (120119சி).

(120119டி), (120121ஏ), (120134ஏ), (120152ஏ), (120222ஏ), (120222பி), (120222சி), (120222டி), (120222ஈ), (120239ஏ), (120239பி), (122127ஏ), (122232ஏ), (122232பி), (122250ஏ), (122265ஏ), (122278ஏ), (122278பி), (122284ஏ), (122287ஏ), (125573ஏ), (125642ஏ), (125699ஏ),

**கோப்பாய்**

(116575ஏ), (121134ஏ), (121135ஏ), (121136ஏ), (121136பி), (121137ஏ), (121138ஏ), (121203ஏ), (121204ஏ), (123112ஏ), (123115ஏ), (123115பி), (123138ஏ), (123224ஏ), (123962ஏ), (123978ஏ), (125380ஏ).

**மருதங்கேணி**

(085094ஏ), (085095ஏ), (085096ஏ), (085097ஏ),

**நல்லூர்**

(104215ஏ), (104235ஏ), (109967ஏ), (110003ஏ), (117541ஏ), (117685ஏ), (117691ஏ), (122917ஏ), (123116ஏ), (123194ஏ).

(124279ஏ), (124280ஏ), (124282ஏ), (124305ஏ), (124306ஏ), (124407ஏ), (123398ஏ), (123401ஏ), (123401பி), (123506ஏ).

(123538ஏ), (123605ஏ), (123615ஏ), (123615பி), (125206ஏ), (125221ஏ), (125221பி), (125221சி), (125317ஏ), (125368ஏ), (125431ஏ).

**பளை**

(123704ஏ)

**பருத்தித்துறை**

(119026ஏ), (119026பி), (119169ஏ), (119837ஏ), (119892ஏ), (119983ஏ), (119983பி), (119983சி), (119993ஏ), (120015ஏ).

(120015பி), (120 71ஏ), (120171பி), (121953ஏ), (121986ஏ), (122150ஏ), (122150பி), (122291ஏ), (122294ஏ), (122294பி).

(122295ஏ), (122295பி), (122306ஏ), (122306பி), (122336ஏ), (122336பி), (125548ஏ), (125608ஏ),

**சண்டிலிப்பாய்**

(114934ஏ), (115421ஏ), (117066ஏ), (117315ஏ), (117315பி), (119263ஏ), (121604ஏ), (121637ஏ), (121638ஏ), (121638பி).

(121638சி), (121856ஏ), (121856பி), (123386ஏ), (123433ஏ).

(123573ஏ), (123573பி), (123592ஏ), (123618ஏ), (123619ஏ).

(123635ஏ), (125318ஏ), (125318பி), (125318சி), (125330ஏ), (125338ஏ), (125338பி), (125338சி), (125338டி), (125397ஏ), (125397பி), (125397சி), (125397டி).

**தெல்லிப்பழை**

(121382ஏ), (123599ஏ), (123628ஏ), (125118ஏ), (125118பி), (125238ஏ), (125401ஏ).

**உடுவில்**

(121251ஏ), (121254ஏ), (123881ஏ), (123881பி), (123904ஏ), (123905ஏ), (100194ஏ), (117205ஏ), (121468ஏ), (121468பி).

(121468சி), (121600ஏ), (123429ஏ), (123429பி), (123429சி), (123491ஏ), (123502ஏ), (123530ஏ), (123553ஏ).

(123553பி), (123561ஏ), (123585ஏ), (123908ஏ), (125124ஏ), (125124பி), (125158ஏ), (125373ஏ), (125373பி), (125373சி), (125373டி),

**உதயவாக்கு**

ஏழை மீது இரக்கம் காட்டு கடவுள் உன்மீது கருணை காட்டுவார்.

– ஸ்ரீ இராமகிருஷ்ணர்

## நாளை

ஐப்பசி 22

திங்கட்கிழமை

திதி: அமாவாசை

முற்பகல் 9. 34 வரை

நட்சத்திரம்: சுவாதி

காலை 7. 11 வரை

கந்த ஷஷ்டி விரதம் ஆரம்பம்

சுபநேரம்: 12.05 — 1.35

ராகுகாலம்: 7.35—09.05


(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாடிக்கையாளர்களுக்கு

# எமது தீபாவளி வாழ்த்துகள்!

# திரு வீடியோ விஷன்



## கலர் போட்டோ கிராபிக்ஸ் அன்ட் கலர் லாப்

- சகல விதமான கலர் படச் சுருள்களையும் துல்லியமாகவும் துரிதமாகவும் உங்களுக்கு விரும்பிய அளவுகளில் அனுபவம் மிக்க தொழில் நுட்ப வல்லுநர்களால் பிரதியாக்கம் செய்து தரப்படும்.
- மூன்று நிமிடங்களில் கலர் பாஸ் போட், அடையாள அட்டைப் படங்களைப் பெற்றுக்கொள்ளலாம்,
- எல்லா அளவுகளிலும் உங்கள் ஆவணங்களைப் பொலித்தீன் கவர் (Lamination) இட்டுக் கொள்ளலாம்.
- உங்களுக்குத் தேவையான கலர் படங்களை விரும்பியபடி படம்பிடித்துக்கொள்ள நவீன வசதி கொண்ட ஸ்ருடியோவும் பூங்காவும் அமைந்துள்ளது
- உங்கள் வீடுகளில் நடைபெறும் மங்களகரமான சகல நிகழ்வுகளையும் ஏனைய நிகழ்வுகளையும் நினைவில் நீங்காதவையாக இருக்க நவீன வீடியோ கமராக்கள் நவீன கொம்பியூட்டர் மிக்சர் மூலம் துல்லியமாக வீடியோப் படம் பிடித்திட எம்மை நாடுங்கள்.
- FUJI தயாரிப்புக்களான FUJI கலர் (பிலிம் றோள்) கறுப்பு வெள்ளை படச்சுருள்கள் ஓடியோ, வீடியோ கசற்றுக்களையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
- சொக்கட்டான் பந்தல், மணவறை, நவீன பிளாஸ்ரிக் கதிரைகள் பெற்றுக்கொள்ளலாம்.
- நீங்கள் எடுக்கும் கலர் படச்சுருள்களை துரிதமாகவும், துல்லியமாகவும் கழுவ உங்கள் அருகில் உள்ள பின்வரும் எங்கள் முகவர்கள் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ தொடர்பு கொள்வலாம்.

## திரு வீடியோ விஷன்

### கலர் போட்டோ கிராபிக்ஸ் அன் கலர் லாப்

### முகவர்கள்:

**ஸ்ரீ வல்லிபுரா போட்டோ**
545, பருத்தித்துறை வீதி, நல்லூர். புலோலி தெற்கு, புலோலி.
T. P. 070-212720

**சன்லைற் றைக்கிளீனர்ஸ்**
(Sunlight Drycleaners)
யாழ். பஸ்நிலையம் முன்பாக, யாழ்ப்பாணம்.
T. P. 021-2741

**போட்டோ செலக்ற்**
புகைப்படப் பிடிப்பாளர்
298, காங்கேசன்துறை வீதி,
மருதனார்மடம், சுன்னாகம்.

**செல்வன் போட்டோ**
நவாலி றோட், ஆனைக்கோட்டை.

**வீடியோ ஜெயம்**
நுணாவில் மத்தி, சாவகச்சேரி.
T.P. 070 - 212429

**சிவாஸ் ஸ்ருடியோ அன் வீடியோ**
பிரதான வீதி, சித்தன்கேணி. பண்டத்தரிப்பு. சங்கரத்தை.
T.P. 070 - 212574

**றெயின்போ மினி லாப்**
சேகரிப்பு நிலையம்,
சிவா தொலைபேசி நிலையம்,
448A, K.K.S. றோட், யாழ்ப்பாணம்.
T.P. 021 - 2913

**செல்வம் போட்டோ**
நெடியகாடு, வல்வெட்டித்துறை,

# புகைப்படப் பிடிப்புப் போட்டி - 2000

## Photo Contest - 2000

(1) வெளிப்புற. உட்புற காட்சிகள் எடுக்கப்படலாம்.
(2) புகைப்படம் எந்த Film Roll பாவித்தும் எடுக்கலாம்.
(3) ஆனால் 4R 6R அளவுகளில் Fuji Colour Paper இல் மாத்திரம் பிரதியாக்கம் செய்யப்பட்டு 6R படத்தின் பின் புறத்தில் உங்கள் புகைப்படப் பிடிப்பு சம்பந்தமான சகல விவரங்களும் தரப்படல் வேண்டும்.
( பெயர், விலாசம் பாவிக்கப்பட்ட Film கமெரா Flash, Shutter Speed, Apature )
அத்துடன் அப் படங்களுக்குரிய Negative தரப்படல் வேண்டும்.
(4) ஒருவர் 3 புகைப்படங்களுக்கு மேற்படாது அனுப்பலாம்,
(5) நடுவர்களால் தெரிவு செய்யப்பட்ட முதல் மூன்று படங்களுக்கும் பெறுமதிமிக்க பரிசில்கள் வழங்கப்படும்.
(6) தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் Photo Contest - 2000 என எழுதப்படல் வேண்டும்.
புகைப்படங்கள் நேரடியாகவோ, பதிவுத் தபால் மூலமாகவோ எமக்குக் கிடைக்கவேண்டிய இறுதித் திகதி 15-12-1999.

அனுப்பவேண்டிய முகவரி:

## திரு வீடியோ விஷன்

### கலர் போட்டோ கிராபிக்ஸ் அன் கலர் லாப்

**மூத்த விநாயகர் கோயிலடி,**
**கரணவாய் தெற்கு, கரவெட்டி.**
T.P. No. 070 - 212231

(சி/9717)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன் தீபாவளிச் சிறப்பு மலர்

## தீபாவளியின் தத்துவத்தை உணர்ந்து எங்கள் அகந்தையை நீக்குவோம்

சி. சக்திகிரீவன்

இந்துக்களின் திருநாள்களில் தீபாவளி முதன்மையானது. தீபாவளி பற்றி பல நூல்கள் பலவாறாக விதந்து கூறுகின்றன. இந் நாள்தனை உலகில் வாழும் கோடிக்கணக்கான இந்துக்கள் கொண்டாடி மகிழ்கின்றனர்.

வனவாசத்தைப் பூர்த்தி செய்த இராமபிரான் அயோத்தி மாநகருக்குத் திரும்பிய நாள் தீபாவளித் தினமே யாகும். ஸ்ரீராமனைக் கண்ட மக்கள் வீடுகளிலும் தெருக்களிலும் தீபமேற்றிக் குதூகலித்து ஆகிழ்ந்தனர் என்பது அறியப்படுகிறது. அந்த நாளை நினைவு கூருமுகமாக புனித நீராடிப் புத்தாடை அணிந்து வழிபாடுகளை நிறைவு செய்து தீபமேற்றி மகிழ்ந்து அறுசுவை உண்டு மனம் பூரிப்பது மரபாகிவிட்டது என்பதும் ஒன்று.

### மகாபலி முடிசூடிய நாள்

இராஜாதிராஜாவாகத் திகழ்ந்த மகாபலிச் சக்கரவர்த்தி தீபாவளித் தினத்தில் இராஜாதிராஜாபிஷேகம் பெற்று முடிசூடிக் கொண்டானாம். அத்தினத்தை நினைவு கூரும் வகையில் பின்னர் வந்த மன்னர்களும் மகாபலியை நினைந்து வணங்கி வழிபாடுகள் ஆற்றி வந்துள்ளனர். பரம்பொருளின் அனுக்கிரகம் பெற்ற மகாபலி ஆண்டு தோறும் நடைபெறும் தீபாவளித் தினத்துக்கு பூவுலகிற்கு வந்து தரிசிக்கும் பேற்றைப் பெற்றமையால் இத்தினம் புனிதமாகப் பேணப்பட்டு வருகிறதென்பாருமுளர்.

இந்துமத பீடாதிபதியான ஸ்ரீ ஆதிசங்கரர் ஞானபீடங்களைத் தீபாவளித் தினத்தில் ஸ்தாபித்து ஆத்மீக எழுச்சியை உலகில் ஏற்படுத்திய தினமுமாகவும் அமைகிறது.

இந்தியத்திருநாட்டில் இந்து மதச் சார்புள்ள சர்வமதத்தினரும் தீபாவளி தினத்தை மகிழ்வோடு போற்றி வருகின்றனர்.

காமிகம், காரணம், வாதுளம், சுப்பிரபேதம் போன்ற ஆகமங்கள் தீபாவளி பற்றி விதந்து பேசுவது இத்தினப் பெருமைக்கு மேலும் வலுவூட்டி நிற்கிறது.

இத்தகைய புனிதமான நாளை வழிபாட்டிற்குரிய நாளாகப் பேணவேண்டிய பெரும் பொறுப்பு நம்மவரைச்சார்ந்துள்ளது. இந்தியத் திருநாட்டில் வங்கதேசத்தினர் காளியைப் பூஜிக்கும் தினமாகக் கொள்கின்றனர். வடநாட்டில் குபேரனது அருள் வேண்டிப் பூஜிக்கும் தினமாகவும் கொள்கின்றனர்.

### கௌரி விரதம் அமைந்த நாள்

ஏனைய பல பாகங்களிலும் கேதாரேஸ்வரரை நோக்கிக் கேதாரகௌரி தவமிருந்த நாள்களுள் ஒன்றாகப் போற்றுவதுமுண்டு. வழமையில் தீபாவளி அமாவாசையன்று கேதாரகௌரி விரதம் நிறைவுபெறும். இதனுள் தீபாவளித் தினம் அனேகமாக அமைந்து வருவது காணக்கூடியது. இந்த அமாவாசையைத் தொடர்ந்து கந்தசஷ்டி விரதம் ஆரம்பமாவதாலும் இந்நாள் புனிதமாகிறது. திதி நிர்ணயங்களில் கந்தசஷ்டி மாறுவதுமுண்டு.

இத்தகைய புனிதமான நாளில் புனித நீராடி, கர்மானுஷ்டானங்களை நிறைவு செய்து ஆலய தரிசனம் செய்தல் மிக அவசியமானதாகும். இந் நாளில் சிவபூசை, தர்ப்பணங்கள், தானதர்மம் போன்றவையும் மிக அவசியமானதாகும். இந்தப் புனித நாளில்சிவபிரானை நோக்கிப் பிரார்த்தித்தல் நம்மவர் கடனாகும். எமது சொந்தச் சகோதரர்கள் வன்னியில் தாழ்வுற்று மிகுந்த சோதனையோடு வாழ்கின்றனர். அவர்களின் துன்பம் நீங்கவும் எமது இனம் வாழ்வுபெற வேண்டியும் இறைவனைப் பிரார்த்திப்பதே இன்று ஆற்ற வேண்டிய பொருத்தமான ஒரு பணி.

ஒவ்வொரு தனி மனிதனிடமும் உள்ள ஆணவமும் அரக்கத்தனமும் அகற்றப்பட வேண்டும் என்ற அரிய தத்துவத்தை எடுத்துச் சொல்கிறது தீபாவளி. அதனை உணர்ந்து எங்கள் இதய அசுத்தங்களை அகற்ற இன்றைய நன்னாளில் சங்கற்பம் பூணுவோமாக. ★

## மனித நேயம் பேணுவோம்

ஒளியினை ஏற்றி இருளினைப் போக்கி,
 உள்ளொளி கண்டு உயிர்ப்புறு மாறு;
வழி வழி வந்த தீபா வளிநாள்
 வாழ்வினில் சாந்தியை வரித்திடும் திருநாள்
பழிகளும் பாவமும் பொறிவழி புலன்களிற்
 பற்றிடா வண்ணம் பார்த்திடும் பெருநாள்
தெளிவிதை உணர்ந்து தெய்வம் தொழுது
 தென்பினைப் பெற்றுத் திழைப்பதே நன்று!

பண்டிகை எல்லாம் சுற்றம் தழுவி [ப்]
 பாங்குடன் மனைகளில் எடுப்பதே மரபு;
இன்றெலாம் எங்கும் எடுக்கலாம் என்று
 இயம்புதல் எல்லாம் எடுப்பலால் வேறிலை
துன்பமும் போரும் தொடருமிந் நாளில்
 தூய்மையாய் மனித நேயமே பேணி
அன்பினில் விளைந்து ஆணவம் அடக்கி
 அமைதியில் திழைத்திட உழைப்போம்!

-- நயினைக் கவிஞர் நா. க. சண்முகநாதபிள்ளை

## தொல்லைகள் நீங்கிட வேண்டும்!

தீபாவளி வந்திட வேண்டும்—நல்ல
 தீபங்கள் ஏற்றிட வேண்டும்
தீயவர் அழிந்திட வேண்டும்—நமது
 தொல்லைகள் நீங்கிட வேண்டும்.

தமிழினம் வாழ்ந்திட வேண்டும்—அவர்
 சொந்த நிலம் மீண்டும் கைசேர்ந்திட வேண்டும்
புலம்பெயர்ந்தவர் வந்திட வேண்டும்—இங்கு
 புதுவாழ்வு பிறந்திட வேண்டும்.

தேவர் பட்ட துயரையெல்லாம் தீர்த்தளித்த
 மாயவனே
ஆருமற்ற அநாதைகளாய் அல்லலுறும் தமிழரெமை
நாடு போற்றும் மக்களாய் விளங்க வைத்தல்
 உன்கடனே
தேரேறிச் சென்ற கண்ணா! நிதமுனைத்
 தொழுவோம்!

— ஆனந்தன்

## பதம் பணிவோம்!

தீபத் திருநாளாம் தீபாவளி நன்னாளில்
 திருவிளக்கேற்றித் திருமகளைத் தொழுவோம்
பாபவிமோசனமளிப்பாய்பரம்பொருளே எனத்துதித்து
 பாமாலை பாடிப் பதம் பணிவோம்!

ஆண்டிலோர் தீபாவளியாம் ஆனந்த நன்னாளிதுவாம்
 ஆடைகளணிந்து அகமிக மகிழ்ந்திடுவோம்
வேண்டிய வரமளிக்கும் பரந்தாமன் பாதத்தினை
 வேதனை தீர்ப்பாய் என வேண்டித்
 துதித்திடுவோம்!

இ. ஸ்ரீதரன்

## தீபாவளி ஆகமங்களில் விதந்து பேசப்படும் அர்த்தமுள்ள திருநாள்

மனித வர்க்கத்தில் வாழ்நாளே தேவ—அசுர நிலையில் தான் நிற்கிறது. யார் எங்கு யுத்தம் செய்தாலும் அது அவரவர்களின் உள்ளத்தில் நடக்கும் போராட்டத்தின் வெளி அடையாளமே தவிர வேறு இல்லை.

தேவ—அசுர யுத்தம் வெளியில் நடந்தது போக ஒவ்வொருவர் உள்ளத்திலும் யுத்தம் நடக்க ஆரம்பித்துவிட்டது.

வெளி உலகப் போராட்டத்தை விட இது பயங்கர நிலைப் போராட்டம். இதற்குப் பரிகாரம் தெய்வீகத் தன்மையை நமது அகத்துள் வளர்த்து நற்காரியங்களைச் செய்வதேயாகும்.

ஒவ்வோர் ஆத்மாவும் இயற்கையில் நல்லவர்கள். தெய்வத் தன்மை கொண்டவர்கள். ஆனால் அசுரத் தன்மை அவர்களைத் தன் பக்கம் இழுக்கிறது.

நற்காரியங்களைச் செய்யவிடாமல் அசுரத் தன்மை தடுக்கிறது. இவற்றுக்கிடையில்ஆன்மா மாட்டிக்கொண்டு திண்டாடுகிறது.

கலியுகத்தில் ஒவ்வொரு மனிதனும் கெட்ட காரியங்களைச் செய்ய ஆரம்பிக்கின்றான். அவனைத் திருத்துவதற்கு வழி தெய்வத் தன்மையை வளர்த்து அசுரத் தன்மையை அழிக்க வேண்டியது தான்.

பிரமாண்டமான மாநாடுகள் கூட்டி ஏராளமான பணத்தைச் செலவழித்து பிரசாரம் செய்வதை விட தனிப்பட்ட ரீதியில் தன்னால் முடிந்த நற்காரியங்களைச் செய்து தெய்வத் தன்மையை வளர்ப்பதே சிறந்தது ஆகும்.

ஒரு மனிதன் தானும் வாழ்ந்து பிறரும் வாழவேண்டுமென்று நினைத்தால் அதுவே தெய்வத் தன்மை. ஆனால் இதற்கு மாறாக தன்னையும் அழித்து பிறரையும் அழிக்க முற்பட்டால் அது அசுரத்தன்மை.

தனக்கு மேல் தெய்வம் ஒன்று இல்லை என்று நினைப்பதும் ஒன்றுக்கும் கட்டுப்படாமல் தன்னுடைய சுயநலத்தை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு செயற்படுவதும் அசுரத் தன்மை என சாஸ்திரங்களில் வரையறுக்கப்பட்டுள்ளன.

இந்துமதமானது புராணங்கள் மூலம் தேவர்கள்—அசுரர்கள் என்ற கதையைச்சொல்லி முடிவாக தெய்வீகத் தன்மை மேலோங்கி அசுரத் தன்மைகள் அடியோடு அழிக்கப்படுகின்றன எனக் கூறி ஆன்மாக்களை நற்செயல்களின்பால் திருப்புகிறது.

மனிதன் தெய்வ நிலையை எய்துவதற்கு பல்வேறு வழிவகைகளை இந்துமதமானது வகுத்துள்ளது. பெரும் எடுப்பில் யாகங்கள், கிரியைகளைச் செய்வதன் மூலம் மனிதன் தெய்வீக நிலைக்கு உயர முடியும் எனக் குறிப்பிட்டுள்ளது.

அவ்வாறு முடியாதவர்கள் நல்வழியில் இந்துமதம் காட்டும் கொள்கைப்படி நடந்து நற்காரியங்களைச் செய்தலே போதுமானது என இந்துமதம் கூறியுள்ளது.

மனிதனுடைய அன்றாட வாழ்க்கையில் நடக்கும் தேவ—அசுர யுத்தத்தில் வெற்றி பெற நல்ல சிந்தனைகளுடன் நற்காரியங்களைச் செய்து தெய்வீகத்தன்மையை வளர்த்துக்கொள்ள வேண்டும்.

மங்களகரமான இந்தத் தீபாவளி நன்னாளில் ஸ்நானம் செய்து, புது ஆடையை உடுத்து பெரியோர்களின் ஆசியைப் பெற்று நம்மால் முடிந்த வரை தெய்வீகத் தன்மையை வளர்க்க உறுதி பூணுவோமாக!

★

[நன்றி.
"கல்கி" தீபாவளி மலர் 1982]

குலம் கிறீம் ஹவுஸ் ஸ்தாபனத்தாரின் உள்ளம் உவகை கொள்ளும்
தீபாவளி வாழ்த்துகள் அனைவருக்கும் உரித்தாகட்டும்!

KULAM CREAM HOUSE JAFFNA

குலம் கிறீம் ஹவுஸ்

226, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சி/9730)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன் தீபாவளிச் சிறப்பு மலர்


எமது

வாடிக்கையாளர்களுக்கும்

ஆதரவாளர்களுக்கும்

இனிய

தீபாவளி வாழ்த்துகள்

கொமர்ஷல் வங்கி

உங்கள் ஆதாயமே எங்கள் நோக்கம்

(சி/9687)



வாடிக்கையாளர்கள், நண்பர்கள் அனைவருக்கும்

எமது

தீபாவளி வாழ்த்துகள் உரித்தாகட்டும்




தரமான மூக்குக் கண்ணாடிகளைப் பெற்றுக்கொள்ளவும்
உங்கள் பற்களை அழகுற சீரமைத்துக்கொள்ளவும்
இன்றே நாடுங்கள்:

எரிக்கணேஷ்

மூக்குக் கண்ணாடி அகம்

ERIC GANESH

OPTICIANS, DENTAL .....?
PHARMACY & GROCERY

உள்நாட்டு வெளிநாட்டுத்
தொலைத் தொடர்பு

566, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T. P. 2486

(சி/9652)



# லங்கா நிப்போனின்

இனிய

தீபாவளி வாழ்த்துகள்

SOLE AGENTS FOR:

NIPON — Automatic Rice Cooker
NIPON — Fans
NIPON — Energy Saving Bulbs
NIPON — Gas Cooker
NIPON — Electronic Lighting Fixtures
( FIRST TIME IN SRI LANKA )
NIPON — Clocks
NIPON — Desk Lamps
NIPON — Magic Touch Lamps
NIPON — Helmets
NIPON — Antennas & Boosters
NiPON — Cables For T. V.
NIPON — Cassette Radio

மேலும் பிளாஸ்ரிக் கதிரைகளும் மற்றும் பொருள்களும்
KOBE அன்டனாக்களும் பூஸ்டர்களும் விற்பனையில்
இலங்கையில் முதலிடம் வகிப்பன

- பரந்த, அளவிலான பொருள்கள்
- மிகக்குறைந்த விலையில்
- சகல பொருள்களுக்கும் உத்தரவாதம்

யூரோமைன்ட்

அக்ரிவ் மல்ரி டிரைக்ஷனல்
அன்டனாவில் பூஸ்டர் பொருத்தப்பட்டுள்ளது



* அனைத்து அலைவரிசைகளிற்கும்
ஒரே அன்டனா
* ஜேர்மன் தொழில்நுட்பம்

LANKA NIPPON

No. 18, Keyzer Street, Colombo 11.
Tel: 437735 Fax: 437736
No. 10, Trelawny Place, (Behind Milk Bar), Bambalapitiya Junction,
Colombo 4. Tel: 589992

[சி/9695]


## கொழும்புக்கு பனஞ்சாராயம்

யாழ்ப்பாணம், நவ. 7

யாழ்ப்பாணத்திலிருந்து மேலும் 50 ஆயிரம் போத்தல் சாராயம் ஒரு சில தினங்களில் கப்பல் மூலம் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது.

திக்கம் மற்றும் வலிகாமம் பனை தென்னைவள கூட்டுறவுச்சங்கக் கொத்தணிபோன்றவற்றினால் உற்பத்தி செய்யப்பட்ட 90 ஆயிரம் போத்தல் சாராயம் இரு கட்டங்களாக ஏற்கனவே கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

இச்சாராயத்துக்கு கொழும்பில் ஏற்பட்டுள்ள கிராக்கியைத் தொடர்ந்து மூன்றாவது தடவையாக கொழும்புக்கு சாராயம் அனுப்பி வைக்கப்படுகிறது. (ஐ-5)

## திருடன் பிடிபட்டான்

தென்மராட்சி, நவ. 7

சாவகச்சேரி நகரப் பகுதியில் திருட்டுக்களில் ஈடுபட்டு வந்த கும்பலைச் சேர்ந்தவர் எனக் கருதப்படும் ஒருவர் கல்வயல் பகுதியில் திருட்டு முயற்சியில் ஈடுபட்ட போது பொதுமக்களால் துரத்திப் பிடிக்கப்பட்டார்.

இச்சம்பவம் கடந்த புதன் கிழமை இரவு இடம்பெற்றது.

வீட்டில் உள்ளவர்களை ஆயுதம் காட்டிப் பயமுறுத்திய வேளையில் வீட்டுக்காரர் கூக்குரல் இடவே திருடர்கள் ஓடிவிட்டனர். மக்கள் துரத்திச் சென்று ஒருவரைப் பிடித்து அருகில் உள்ள படை முகாமில் ஒப்படைத்தனர்.

[ம-117]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன் தீபாவளிச் சிறப்புமலர்

# இந்துக்களின் புனிதத்தை காக்க இந்நன்னாளில் நம்மை இதய சுத்தியுடன் அர்ப்பணிப்போம்

இந்துக்களின் இனிய பண்டிகைகளிலொன்று தீபாவளி. ஐப்பசி மாதத்தில் வரும் இப்புனித நாளை அகில உலகம் முழுவதும் வாழும் இந்துக்கள் அகமகிழ்ந்து கொண்டாடி மகிழ்வர். தீபாவளி என்ற சொல்லுக்குத் தீபங்களின் ஆவளி அல்லது வரிசை என்பது பொருள். அறியாமை என்னும் இருட்டில் இருந்து விடிவுபெற அருள் வேண்டும் திருநாளாக இவ்விழாவை



அர்த்தத்தோடு எம் முன்னோர் கொண்டாடி வணங்கினர். நரகாசுரன் என்னும் அசுரன் ஆணவத்தால் வையகத்தை வருத்தினான். அல்லற்படும் அடியவர்களை மீட்பதற்காக ஸ்ரீகிருஷ்ணன் பூவுலகை நோக்கி வந்து கொடுமை மிக்க நரகாசுரனை வதம் செய்தபோது தன் இறுதி நிலையில் இறைவனை வணங்கிய அவ் அசுரன் தன் வேண்டுதலாக உலகுக்கு செய்தி சொன்னான்!

தீயவனாகிய நான் அழிந்த நாளை திருநாளாகக் கொண்டாடி உலகம் உய்வு பெறவேண்டும் என்று. அன்று முதல் எழுந்த திருநாளே தீபாவளி என்னும் திருநாள் எனப் புராணங்கள் விளக்குகின்றன. தீயவை அழிந்து நன்மைகள் பெருக வேண்டும் என்ற நோக்கில் தீபாவளி ஆண்டு தோறும் இந்துக்களின் வாழ்விடங்களில் வழிபாட்டுக்குரிய நாளாகக் கொண்டாடப் படுகிறது.

இந்துக்களின் ஒவ்வொரு விழாவும் அற்புதமான தத்துவங்களைக் கொண்டது. உலகிலுள்ள மதங்களிலே விழாக்கள் கூடிய மதமாக இந்துமதம் விளங்குகிறது. ஒவ்வொரு விழாவும் வாழும் மனிதனை புனிதமாக, பூரணமாக வாழ்வதற்கு அர்த்தம் கற்பிக்கும் விழாவாக அமைந்துள்ளது. இப்பெருமைக்குரியவர்களாகிய இந்துக்கள் விழாக்காலங்களில் தம் பண்பாட்டு பாரம்பரியங்களைப் பேண முனைதல் வேண்டும்.

இந்துக்கள் பிறரின் இடர் களையும் பண்புடையவர்களாக வாழவேண்டும் என்பது எம் முன்னோர்களின் அறிவுரை. இவற்றை நாம் சிந்திக்க வேண்டும். எம்மிடம் உள்ள அசுரத்தனம் போகவும், எம்மைச் சூழ்ந்த அசுர வாழ்வில் இருந்து நாம் விடுபடவும் இப்புனித நாளில் நாம் பிரார்த்திக்க வேண்டும். எம்மை வருத்திய துன்பங்கள் எவர்க்கும் ஏற்படக்கூடாது இறைவா! என்று உள்ளத்தால் வணங்க வேண்டும்.

உலகம் நல்லவர்களால் நிரம்ப வேண்டும் என்று ஞானிகள் கூறிய வார்த்தையை ஒவ்வொருவரும் உச்சரிக்க வேண்டும்.

புத்தாடை உடுப்பதும், தத்தமக்கு வரங்கேட்டு வழிபடுவதும் உற்றாரோடு உண்டு மகிழ்வதும்தான் விழாக்காலம் என நினைத்தல் தவறு. விழாக்காலம்; நாம் விட்ட தவறுகளை நினைக்கும் நாளாக, எம்மிடம் இருந்து அகல வேண்டிய அறியாமையை விடுவிக்கும் நாளாக அமைதல் வேண்டும்.

எத்தனையோ நல்ல மனிதர்களிடம் ஒரு சிறிய கெடுதியான குணம் குடிகொண்டு நல்ல பண்பையும் பழுதாக்கிவிடுகிறது. சுவாமி இராமகிருஷ்ணர் குறிப்பிட்டது போல "கூடையிலுள்ள பல அழகான மாம்பழங்களில் ஒன்று அழுகிவிட்டால் ஏனைய மாம்பழங்களையும் அது பாதித்து விடும். எனவே பழுதடைந்த மாம்பழத்தை அப்புறப்படுத்தினால் பல மாம்பழங்கள் பாதுகாக்கப்படும்." மனிதனிடம் பழுதுள்ள மாம்பழத்தின் நிலை போன்ற இயல்புகள் இருந்தால் அதை அப்புறப்படுத்த வேண்டும். இல்லையெனில் அவனிடமுள்ள நல்லியல்புகளும் அசிங்கமாகிவிடும். எனவே நல்ல ஆன்மாக்களாகிய நாம் புனித திருநாள்களிலே எம்மிடமுள்ள அசுத்தமான இயல்புகளை அகற்றி வாழ்வில் புனிதம் பெறவேண்டும்.

இன்று 20ஆம் நூற்றாண்டின் நிறைவுத் தீபாவளியைச் சந்திக்கின்றோம். இதயத்தைப் புனிதமாக்க நாம் எண்ண வேண்டும். இரக்கசிந்தனை எம்மிடம் வளரவேண்டும். எங்கள் ஒவ்வொருவருக்கும் இருக்கும் மகத்தான கடமைகளை எண்ண வேண்டும். பண்புடைய சமுதாயத்தைக் காண விளைதல் வேண்டும்.

**செஞ்சொற்செல்வர்**
**ஆறு.திருமுருகன்**

தர்மசிந்தனையோடு தீமைகளை விரட்டி வாழ நாம் திடசங்கற்பம் பூண வேண்டும். இளைய சமுதாயத்தை வளப்படுத்த வாழும் சமுதாயம் தயாராக வேண்டும். ஆன்மீகப் பெருநாள்கள் அடக்கமாக வழிபாடு செய்து உறவை வளர்க்கும் உத்தமநாள்கள். எனவே இதுவரை எம்மைச் சூழ்ந்த பாவங்களில் இருந்து விடிவு கேட்க வேண்டிய திருநாளில் ஒன்றும் அறியா மிருகங்களை உணவுக்காக வதம் செய்து வருத்துவது நாமே நமக்கு நரகத்தை சிருஷ்டி செய்வதாகிவிடும்.

சிந்தியுங்கள். வாணிபம் புனிதமான தொழில். திருமகளின் திருவருளால் திவ்விய வாழ்வு வழங்குவது வாணிபம். வளம் பெருக்க வேண்டும் என்பதற்காக வாழும் பயிர்போன்ற இளையவர்களுக்கு மது விற்கும் வாணிபம் பாவத்தைச் சம்பாதிக்க வைத்துவிடும்.

எனவே தான் இத்தகைய திருநாள்களில் எம்மை நாம் திருத்த முனைவோம். எதிர்காலச் சந்ததியிடம் புண்ணியம் சேர்க்க முனைவோம். தீபாவளி எம்மிடம் உள்ள அழுக்கைக் கழுவட்டும். எம்மை இவ்வுலகுக்கு உரியவராக்கட்டும்.

இனிய எம் உறவுகளே இந்துக்களின் புனிதத்தைக் காக்க முனையுங்கள்! புதிய யுகத்தில் நாம் புனிதமானவராக வாழப் பிரார்த்திப்போம்.

---

## நல்லை ஆதின முதல்வரின் தீபாவளிச் செய்தி

தீபாவளி தினமாகிய இந்நாளில் மக்கள் அனைவரும் பிரார்த்தனையில் ஈடுபடுவது ஆத்மீக பலத்தை மேலும் அதிகரிக்க வழிவகுக்கும்.

சகலருக்கும் இதயம் கனிந்த தீபாவளி நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**குருமகா சந்நிதானம்**
**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள்**

---


## இருளை அகற்ற ஏற்றுக தீபம்

தீபங்கள் ஏற்றி பாபங்கள் போக்கி தீபாவளி கொண்டாடுவோம்.
தாபங்கள் மாற்றி கோபங்கள் நீக்கி திருநாளில் பண்பாடுவோம்
காமகுரோத மோகமதத்தை கட்டோடு அழித்திடுவோம்
சாம, பேத தானதர்மம் தழைக்கச் செய்திடுவோம்

பயிரை வளர்த்து பகைமை ஒழித்து பஞ்சத்தை நீக்கிவிடுவோம்
உயிரைக் காத்து உடலை ஓம்பி ஒற்றுமை சேர்த்திடுவோம்
மானம் காத்து மதியைச் சேர்த்து விதியை வென்றிவோம்.
கானம் இசைத்து தியானம் செய்து கண்ணனை வழிபடுவோம்.

**கீழ்கரவை செல்லையா வல்லிபுரம்**


## எமது இதயம் கனிந்த தீபாவளித் திருநாள் வாழ்த்துக்கள்




# நிள்மா

நறுமணச் சொட்டு நீலம்

ஜப்பானிய கட்டமைப்புக்கு அமைய சர்வதேச தரத்திற்கேற்ப நவீன முறையில் தயாரிக்கப்பட்ட நறுமணம் கொண்ட சொட்டு நீலம் நிள்மா.

இது ஆடைகளில் காணப்படும் பழுப்பு நிறத்தை விரட்டியடித்து ஒளிவீசும் பிரகாசமான வெண்மையை தருவதுடன் ஆடைகளுக்கு மிருதுவான தன்மையைத்தந்து ஆடைகளின் பாவனையை நீடித்துத் தருகிறது.

ஒரு லீட்டர் நீருக்கு நிள்மா 4/5 துளிகள் வீதம் இட்டு கலக்கிய பின் சலவை செய்து பிழிந்த நிலையில் உள்ள ஆடைகளை நிள்மா நீரில் ஒவ்வொன்றாக இட்டு உங்களுக்கு தேவையான வெண்மைக்குக்கேற்ப அலசிய பின் நன்றாக பிழிந்து நிழலில் காயவிடவும்.

இப்போது முற்றும் புதியவை போன்ற தோற்றமுடைய ஒளி வீசும் பிரகாசமான வெள்ணிற ஆடைகள் உங்கள் கைகளில்.



சந்தைப்படுத்துவோர்
ஏஜே டிரேடிங் கொம்பனி
95, ஜெயந்த வீரசேகர மாவத்தை
கொழும்பு 10 தொலைபேசி: 458699

இணையற்ற தூய அன்புக்கு அம்மா, ஒளிமயமான வெண்மைக்கு நிள்மா.

யாழ். ஏக விநியோகஸ்தர்கள்

**CITY AGENCY**
No. 158, STANLEY ROAD
JAFFNA.
T.P :- 021-2202 / 021-2991 / 021-2911

**S.V.M**
No. 154, HOSPITAL ROAD,
JAFFNA.
T.P :- 021-2055 / 021-2100


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன் தீபாவளிச் சிறப்புமலர்

## கொண்டாட்டம், ஆரவாரம் எதுவுமின்றி

## தீபாவளியை எளிமையாக அனுஷ்டிப்போம்

ஒவ்வொரு சமயத்தவரும் தத் தமது பண்பாட்டைப்பேணி, சமூகத் தைப்பேணி, மரபைப்பேணி நடப்ப தற்கு உதவிபுரிவன பண்டிகைகளே. இன்றைய பண்டிகையான தீபாவளி மக்களுக்கு ஒரு புனிதமான அர்த்தத் தைக் கற்றுத்தருகின்றது.

இத்தினத்தில் உதயத்தில் தீப மேற்றி வணங்கினால் இல்லங்களில் லக்ஷ்மி வாசம் செய்வாள் என்று புரா ணங்கள் கூறுகின்றன.

தீப + ஆவளி என்பதே தீபாவளி ஆயிற்று. தீபங்களை வரிசையாக ஏற்றிவைத்து அதிகாலையில் இல் லங்கள் தோறும் வழிபட்டு புறஇருளை யும் அகஇருளையும் அகற்றி ஞான ஒளி வேண்டி கொண்டாடும் நாளை தீபாவளித் திருநாள் என்று இந்து மக்கள் கொண்டாடுவார்கள்.

தீபத்தின் ஜோதிக்கு இரண்டு முக் கியமான குணங்கள் உண்டு. இருளை அகற்றுவது ஒன்று. மற்றொன்று மேல் நோக்கி ஜோதி முன்னேறுவதும் ஆகும். ஒரு மேட்டிலோ அல்லது பள் ளத்திலோ விளக்கை வைத்தாலும் அதன் ஜோதி மேல் நோக்கித்தான் எரியும்.

ஆதிகால மக்கள் விளக்கின் ஒளி மேல் நோக்கிச் செல்வது ஞானத்தின் பாதையையும் பின்னர் அதுவே தெய் வீகத்தின் பாதையையும் சுட்டிக் காட்டு வதாகக் கற்றுத் தந்துள்ளார்கள்.

அறிவு ஒன்றுதான் மனிதனை உயர்த்தும். "அறிவுடையார் எல்லாம் உடையர்" என்கிறார் திருவள்ளுவர். மனத்தின் அறியாமை என்னும் இருளை நீக்கி அறிவாகிய ஞான ஒளியைப் பெருக்க வேண்டும். இதனை உணர்த்துவதும் இத்திருநாளாகும்.

இறைவழிபாடு குறைகளை நீக்கி நிறைவு தரும். முக்கியமாக தீபாவளி நாளில் இறைவனை வழிபடுவது பெரும் பயன்தரும். இப்புண்ணிய தினத்தில் அன்புடன் இறைவழிபாடு புரிபவர்கள் பாவங்களினின்றும் நீங்கிப் புண்ணியம் பெற்று இகம், பரம், வீடு என்ற மும்மை நலங்களையும் எளிதில் பெறுவார்கள்.

**சமூகஜோதி**
**கா.கணேசதாசன்.**

தீபாவளி பற்றிய புராணக்கதை ஒன்றுள்ளது. பலம் பெற்ற நரகாசுரன் என்ற அரக்கன் ஆணவத் திமிர் கொண்டு நல்லவர்களை வருத்தினான். சான்றோர் சஞ்சலமடைந்து இறைவனி டம் முறையிட்டனர். விஷ்ணு மூர்த்தி யாக இறைவன் தோன்றி அசுரனைக் கொன்றான்.

இறக்கும்வேளை அவன் ஒரு வரம் கேட்டான். "நான் இறக்கும் இந்நாளில் என்னை நினைத்து வழிபடுவோருக்கு அருள்புரிய வேண்டும்" என்பதே அவ் வரமாகும். "தண்ணருள் புரியும் தயா நிதியாகிய" இறைவன் கேட்டவரத்தை வழங்கினார். அன்று தொடக்கம் தீபா வளியும் கொண்டாடப்படுகின்றது.

"மாதா, பிதா, குரு, தெய்வம்" என்ற வாக்கிற்கமைய இளைஞர்கள் இத் தினத்தில் அவர்களை வணங்கி அவர்களது மனதை மகிழ்வித்து அவர்களிடமிருந்து அன்புப் பரிசு களைப் பெற்று பேருவகை பெற வேண்டும்.

இத்தினத்தின் புனிதத் தன்மையை அறியாது சிலர் மாமிச போசனம் உண்டும் மதுபானம் அருந்தியும் வீண் களியாட்ட நிகழ்வுகளில் கலந்தும் பண்டிகையின் மகிமையைக் குறைக் கின்றனர்.


இன்றைய சூழ்நிலையில் நாம் அனைவரும் வீண் ஆரவாரத்திற்கோ, பகட்டான ஆடம்பரத்திற்கோ இடமளி யாது ஏழ்மையான, தூய்மையான, எளிமையான, வழியில் திருநாள்க ளைக் கொண்டாடவேண்டும்.

இறைவன் எல்லா உயிர்களிலும் கோயில் கொண்டிருக்கிறான். எனவே தீபாவளியை மிகச்சுருக்கமாக, எளி மையாகக் கொண்டாடி அல்லலுற்று அவதிப்படும் ஏழை எளியவர்களுக்கு உதவி செய்வது சிறந்தது. அமைதி யின்றி வாழும் எமது மக்களை இந்நாளில் நினைவு கொள்ளவேண் டும். அவர்களுக்கும் நமக்கும் சாந்தி, சமாதானம், விடிவு கிடைக்க இறை வனை இறைஞ்சுவோம்.

நம்மவர் தீமைகள் பறந்தோடி வாழ்வில் ஒளி பிரகாசிக்க
எமது தீபாவளி வாழ்த்துகள்
திருமண ~ சுபமுகூர்த்த காஞ்சிபுரம்,
கூறைச்சேலைகளின் அரசி சீமாட்டியே!
சீமாட்டி
புடைவையகம்
122, மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
T.P - 2196
(C/9647)

எமது அருமை வாடிக்கையாளர்கள்,
நண்பர்களுக்கு
தீபாவளி வாழ்த்துகள்
சுபலக்ஷ்மி
நகைமாடம்
பலாலி வீதி, உரும்பிராய்ச் சந்தி,
உரும்பிராய்.
(C/9643)

எமது இனிய நண்பர்கள்,
வாடிக்கையாளர்கள் வாழ்வில்
புதிய ஒளி பிரகாசிக்க எமது
தீபாவளி வாழ்த்துகள்
கோலம் சில்க்ஸ்
166, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.
(C/9661)

தயா நகைப் பூங்கா ஸ்தாபனத்தாரின்
அபிமான வாடிக்கையாளர்கள்
நண்பர்கள் அனைவருக்கும் எமது இனிய தீபாவளி வாழ்த்துகள்
எழில் குன்றா அழகிய தங்கப்பவுண் நகைகளை அசல் 22 கரட்டில் குறித்த தவணையில் உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ள என்றென்றும் நாட வேண்டியவர்கள்

தயா நகைப் பூங்கா
(தங்க - வைர நகை வியாபாரம்)
உரிமையாளர்:
செல்வரட்ணம் தயானந்தன்
213 C, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(C/9656)

தித்திக்கும் தீபாவளி
நல்வாழ்த்துகள்
பட்டாபி படமாடம்
64, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்
(C/9645)

தீபாவளி வாழ்த்துகள்
மங்களம் பொங்கிட மகிழ்வுடன் நீராடி புத்தாடை புனைந்து புதுப்பொலிவுடன் பூவையர்கள் தீபஒளி ஏற்றி திரு உருவின் தாள் பணிந்து திக்கெட்டும் கொண்டாடும் தீபாவளித் திருநாளில் தீந்தமிழர் வாழ்வில் தீமைகள் பறந்தோடி நோயற்ற வாழ்வு பெற்று நூறாண்டு வாழ்கவென வாயார வாழ்த்துகின்றோம்.
பரிமளா ஸ்ரோர்ஸ்
* மகப் பேற்றுத் தாய்மாருக்கும்
* பூப்பெய்திய மங்கையருக்கும்
* மழலைகளின் வளர்ச்சிக்கும்
* கட்டுடல் வேண்டி நிற்கும் காளையருக்கும்
* விளையாட்டில் வெற்றி பெற வீரர்களுக்கும், வீராங்கனைகளுக்கும்
* குடும்பத்தில் அங்கத்தவர்கள் அனைவருக்கும் அருமருந்தாகத் திகழ்வது
V.S.P ஸ்பெஷல் லஞ் ஒயில்
பரிமளா ஸ்ரோர்ஸ்
26 A, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
T. P. - 2785
விளம்பர வடிவமைப்பு: மணிக்குரல் - V.S. சற்குணன்
(C/9650)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன் தீபாவளிச் சிறப்புமலர்

தமிழர் வாழ்வில் ஒளி பிறக்க எமது

## தீபாவளி வாழ்த்துகள்

திருமணப் பட்டாடைகளின் சோலை



## ராகம்ஸ் பட்டுச் சோலை

இல. 24 நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

(C/9658)

---

வாடிக்கையாளர்கள், நண்பர்கள்
அனைவருக்கும் இதயம் கனிந்த

## தீபாவளி வாழ்த்துகள்

விதம் விதமான புடைவைத் தினுசுகளை
வித்தியாசம் வித்தியாசமாக தெரிவு செய்ய



## விநாயகர் புடைவையகம்

62 A, நவீன சந்தை (உட்புறம்)
யாழ்ப்பாணம்.

(C/9640)

---

வாடிக்யைாளர்கள், நண்பர்கள் அனைவருக்கும்

## எமது தீபாவளி நல்வாழ்த்துகள்



உங்கள் ஆடைகளின் எண்ணம்
கோபிகா ஆடையக காட்சியறையின்
ஆடைகளின் கைவண்ணம்

## கோபிகா ஆடையகம்

5/4, நவீன சந்தை (உட்புறம்)
யாழ்ப்பாணம். T. P 2377

(C/9660)

---

சங்கமம் ரெக்ஸின்
மங்களத் தீபாவளி வாழ்த்துகள்

மழைத்துளி மழைத்துளி
மண்ணில் சங்கமம்
பனித்துளி பனித்துளி
மண்ணில் சங்கமம்
புதுவித புடைவைத் தினுசுகள்
சங்கமம்! சங்கமம்!!

சங்கமம் ரெக்ஸில் சங்கமம்

'இறக்குமதி செய்யப்பட்ட றெடிமேட்
ஆடைகளின் பிரத்தியேக காட்சியறை'

## சங்கமம் ரெக்ஸ்

(ஜனரஞ்சகமான ஜவுளிமாளிகை)

54A, நவீன சந்தை (உட்புறம்),
யாழ்ப்பாணம்.

(C/9649)

---

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள், வர்த்தகர்கள்
அனைவருக்கும் தமது

## தீபாவளி நல்வாழ்த்துகளைத்

தெரிவிப்பதில் மிக்க மிகிழ்ச்சியடைகிறார்கள்
நந்தினி நகைமாட ஸ்தாபனத்தார்.
உலகம் வியக்கும் உன்னத நகைத் தெரிவுக்கு

## நந்தினி நகைமாடம்

புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு
218 G, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T. P. NO. 3121

(C/9642)

---

அனைவருக்கும் எமது இனிய
தீபாவளி வாழ்த்துகள்

## சிவன் நகைமாடம்


சிறி பில்டிங், கே. கே. எஸ் வீதி,
மல்லாகம்.

(C/9644)

---

அனைவருக்கும் அருள் விநாயகர் மோட்டோர்ஸ் ஸ்தாபனத்தாரின்
தீபாவளி நல்வாழ்த்துகள் உரித்தாகட்டும்.

யாழ். குடாநாட்டில் மோட்டார் சைக்கிள்கள் அதன் உதிரிப்பாக
விற்பனையில் தன்னிகரில்லாத் தனிப்பெரும் ஸ்தாபனம்



## அருள் விநாயகர் மோட்டோர்ஸ்

103, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

கிளை: 262, கண்டி வீதி,
சாவகச்சேரி.

## அருள் விநாயகர் றேடர்ஸ்

106, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(C/9653)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உதயன் தீபாவளிச் சிறப்புமலர்

அன்பிற்கினிய வாடிக்கையாளர்கள், நண்பர்கள், மாணவர்கள்
அனைவருக்கும் எமது இனிய

## தீபாவளி வாழ்த்துகள்

## சிற்றி ரெக்ஸ் & ரெயிலர்ஸ்

(தையல் கலையில் நவீன முன்னோடிகள்
புடைவைத் திவசுகளின் ராஜ முத்திரை)

73, பெரியகடை, யாழ்ப்பாணம்.

T. P. No - 2671

(C/9638)


---

இல்லங்கள் தோறும் இன்பம் பொங்க இனிய

## தீபாவளி நல்வாழ்த்துகள்

SLIVER SHIELD தயாரிப்புக்ளான

* சொக்ஸ் வகைகள
* நூல் வகைகள
* எலாஸ்ரிக், பேனா, ஸிப
* பெனியன்கள்
* CURVFORM & CARINA பிறேசியர்கள்
* பிளாஸ்ரிக் சாமான்கள



இன்னும் சில
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக் கொள்ளலாம்.

இறக்குமதி செய்யப்பட்ட
பிறந்தநாள், திருமண வாழ்த்து மடல்கள்,
அழைப்பிதழ்கள் விற்பனைக்குண்டு.

## லிங்கன் ஸ்ரோர்ஸ்


168, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(C/9655)

---

இருண்டுள்ள எமது இல்லங்களில் தீபஒளி பிரகாசிக்க
எமது தீபாவளி வாழ்த்துகள் உரித்தாகட்டும்.

கண்ணைப் பறிக்கும் பவுண் மணிகள் உட்பட அனைத்து நகைகளும்
செய்தும் வெட்டியும் பெற்றுக் கொள்ள நம்பிக்கை, நாணயம்,
உத்தரவாதம் நாடுவோர் தேடும் இடம்.



## சுவிஸ்ஸோ

கோல்ட் கட்டிங் & நகைத்தொழிலகம்

44/1, சிராம்பியடி, யாழ். வீதி
யாழ்ப்பாணம்.

(C/9641)

---

அனைவருக்கும்
ஆஷிகா சில்க்ஸ ஸ்தாபனத்தாரின்

## தீபாவளி நல்வாழ்த்துகள்



ஆள்பாதி ஆடைபாதி என்பார்கள். இந்த ஆடை பாதியை அழகுறத் தெரிவுசெய்ய நாடவேண்டிய ஸ்தாபனம்:

## ஆஷிகா சில்க்ஸ்

4, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

(C/9651)

---



தங்க நகையுலகில் மங்காப் புகழ் பெற்ற சாரங்கா நகைமாடத்தினரின்
தீபாவளி நல்வாழ்துகள் அனைவருக்கும் உரித்தாகட்டும்

## சாரங்கா நகைமாடம்

(இணையகம்)

177/4, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T.P - 2480

சிவா நகைமாடம்
(கிளையகம்)
யாழ் வீதி, சாவகச்சேரி.

அருள் முருகன் நகையகம்
(தலைமையகம்)
96/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(C/9662)

---



அனைவரின் இதயங்களையும் மகிழவைக்கும் இனிய

## தீபாவளி வாழ்த்துக்கள்

ராசி சில்க்ஸ்
70, 71A, நவீன சந்தை
(உட்புறம்)
யாழ்ப்பாணம்.

நல்லி சில்க்ஸ்
(விசாலமான காட்சிக் கூடம்)
121/1, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.



(C/9639)

---

வாடிக்கையாளர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது இதயங்கனிந்த

## தீபாவளி வாழ்த்துகள்

# ரவி அன் ராஜ் சில்க்ஸ்

T.Phone - 2469

77, பெரியகடை, யாழ்ப்பாணம்.

C/9646

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன் தீபாவளிச் சிறப்பு மலர்

## அத்தாய் மகளிர் சி. க. கூ. சங்கம்
அல்வாய்

## கேள்வி அறிவித்தல்

கீழ்க் குறிப்பிடப்பட்ட வேலைக்கான 'கேள்விகள் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரின் அனுசரணையின் படி அத்தாய் மகளிர் சி. க. கூ. சங்கத்தால் 12-11-99 முற்பகல் 10 00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்பட்டு முற்பகல் 10.30 மணிக்கு கேள்விச் சபையால் திறக்கப்படும்.

அங்கீ ரிக்கப்பட்ட பொது நிறுவனங்கள் அல்லது பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்த காரர்கள் கேள்விப்பத்திரம் கோருவதற்கு தகுதியுடையவர்கள்.

கேள்விப் பத்திரங்களை அத்தாய் மகளிர் சி. க. கூ. சங்கப் பணிமனையில் 11—11-99 பிற்பகல் 3 மணி வரை கீழ்க் குறிப்பிட்ட கேள்விப்பத்திரப் பணத்தையும் கேள்வி வைப்புப் பணத்தையும் செலுத்துவதன் பேரில் பெற்றுக்கொள்ளலாம்.

| வேலை விபரம் | மீளளிக்கப் படாத கேள்விப் பத்திரப் பணம் | மீளளிக்கப் படும் கேள்வி வைப்புப் பணம் |
| --- | --- | --- |
| 1) அத்தாய் விநாயகர் முன்பள்ளி புனரமைப்பு வேலையும் தளபாட உபகரணக் கொள்வனவும் | 250/- | 1000/- |

மேலதிக விவரங்களை இச்சங்கப்பணிமனையில் வேலை நாள்களில் அறிந்து கொள்ளலாம்.

தம்பிப்பிள்ளை அன்னபூரணம்
தலைவர்.
அத்தாய் மகளிர் சி. க. கூ. சங்கம்,
அல்வாய்.

கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்,
அனுசரணைப்படி.
03—11 1999

(சி/9716)

## அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்புத் திகதி ஒத்திவைப்பு

கரவெட்டிப் பிரதேச செயலக உத்தியோகத்தர் நலன்புரிச் சங்கத்தினரால் 07-11-1999 அன்று அதிர்ஷ்டம் பார்க்கப்படவிருந்த நிகழ்வு தவிர்க்க முடியாத காரணங்களால் 14-01-2000 தைப்பொங்கல் தினத்துக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதென்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

உத்தியோகத்தர் நலன்புரிச் சங்கம்
பிரதேச செயலகம், கரவெட்டி.

வடமராட்சி தெற்கு - மேற்கு,
கரவெட்டி.

(சி/9713)

## பிற்போடப்பட்டுள்ளது

யாழ். நீ/சோமஸ்கந்தக் கல்லூரி
உயர்தர மாணவர் மன்றத்தால் நடத்தப்படும்

**அதிர்ஷ்டலாப சீட்டிழுப்பு**

தவிர்க்க முடியாத காரணத்தினால்
15-01-2000 அன்று அதிர்ஷ்டம் பார்க்கப்படும்.


செயலாளர்
உயர்தர மாணவர் மன்றம்.

யா/சோமஸ்கந்தக் கல்லூரி,
புத்தூர்.

(70737)


## இனிய தமிழ் நெஞ்சங்களுக்கு எமது அன்பான தீபாவளி வாழ்த்துகள்

### மூவ்.





மூட்டு வலி, முதுகு வலி, வாதம், வீக்கம், தசைப்பிடிப்பு என்பவற்றுக்கான உடனடி நிவாரணி.

### க்ராக் க்ரீம்.




இது பாதங்களில் ஏற்படும் வெடிப்பினால் உண்டாகும் இரத்தக் கசிவு, காயம், எரிச்சல் குணமாக்கி வெடித்த குதிகால்களை அழகாகவும், மென்மையாகவும் செய்கிறது 14 தினங்களில் மட்டுமே

### போரோசொப்ட்




பிசுபிசுப்பற்றது. கற்றாழைச்சாறு கலந்தது. முகத்தில் பருக்களினால் ஏற்பட்ட காயங்களை குணமாக்கி கரும் புள்ளிகளை அகற்றுகிறது. இதில் அடங்கியுள்ள விசேட மூலிகைகள் பருக்கள் வரவிடாமல் தடுப்பதோடு முகத்தை வெண்மையாக்கி பொலிவடையச் செய்கிறது.

### ஸ்டாப்பேக் க்ரீம்.... பாம்




இது தலைவலியை நொடியில் பறந்தோடச் செய்கிறது. இதன் பிசுபிசுப்பற்ற தன்மை நெற்றியில் திட்டு திட்டாய் படியாமல் இலகுவில் காய்ந்து தடிமன், உடல் வலிகளிலிருந்தும் நிவாரணம் அளிக்கிறது

### வின்டர் ஷீல்ட்




சந்தனம், வெஸ்லீன், இயற்கை மூலிகைகள் அடங்கியது. இது சருமத்தை உலர்விலிருந்து பராமரிப்பதோடு மேனியை பொலிவடையச் செய்கிறது. இதில் அடங்கியுள்ள விசேட மூலிகைகள் கரடு முரடான உள்ளங்கைகளை மிருது வாக்குவதோடு, தோல், உதடு வெடிப்பிலிருந்து ம் நிவாரணம் தருகிறது.

### டி'கோல்ட் க்ளியர்




வெது வெதுப்பானது சளி, தடிமன், தொண்டை கரகரப்பு, மூக்கடைப்பு ஆகியவற்றிலிருந்து நிவாரணம் அளிக்கிறது.

### இட்ச்காட் டெர்மிகூல் பிரிக்லி-ஈட் பவுடர்




இதன் குழுமையான ∴பார்மியுலா வியர்க்குரு மற்று ம் உடல் அரிப்பிலிருந்து பாதுகாப்பதோடு நறுமணத்தையும் தருகிறது.

* பல கோடி இந்திய மக்களின் நம்பிக்கையை வென்றதும், உலகின் 40க்கும் மேற்பட்ட நாடுகளில் சந்தைப்படுத்தப்பட்டுள்ளதுமான "பராஸ்" தயாரிப்புக்கள் சர்வதேச தரம் கொண்டது
* எமது "பராஸ்" ஆயுர்வேத மருத்துவ தயாரிப்புக்களின் சர்வதேச தரத்தை அறிந்து கொள்ள அனைத்து "பராஸ்" தயாரிப்புக்களின் மேலுறைகளில் சர்வதேச வியாபாரக் குறியீடு 8901177 200250 மற்றும் உற்பத்தித் திகதி, காலாவதியாகும் திகதி அச்சிடப்பட்டுள்ளதா என்று கவனித்து வாங்குங்கள்.

குறிப்பு:- எமது பொருட்களின் அட்டைப் பெட்டியில் சர்வதேச வியாபாரக் குறியீடு பொறிக்கப்பட்டுள்ள பகுதியினை கத்தரித்து கவனமாக சேர்த்து வையுங்கள். அதிகப்படியாக் சேர்ப்பவர்களுக்கு மாபெரும் பரிசு மழையின் போட்டி விரைவில் அறிவிக்கப்படும்.

யாழ்ப்பாணத்தில் எமது ஏக விநியோகத்தர்:- JEGAN PHARMACY, 462/B, HOSPITAL ROAD, JAFFNA. TEL: 2194.

"பராஸ்" தயாரிப்புக்களை யாழ்ப்பாணம் முழுவதும் உள்ள மருந்தகங்கள், சில்லறை கடைகள், பல்பொருள் வணிக நிலையங்கள் மற்றும் அழகு சாதன கடைகள் என்பவற்றில் பெற்றுக் கொள்ள முடியும்.

இறக்குமதி செய்து விநியோகிப்போர்:- PHARMCO MARKETING SERVICES (PVT) LTD.
NO. 629/1, NEGOMBO ROAD, MABOLA, WATTALA.
PHONE:- 01-939167, 074 817642. FAX: 01-939167

(சி/9694)


## வினாடி வினாப் போட்டி

'யுனிசெவ்' உதவியுடன் யாழ். மாநகரசபை சுகாதாரப் பகுதியினால் தாய்மாருக்கான சுகாதார வினாடி வினாப் போட்டி ஒன்று விரைவில் நடத்தப்படவுள்ளது.

முதற்கட்டமாக மாநகர சபையின் 9 சிகிச்சை நிலையங்களில் நடைபெறவுள்ள இந்தப் போட்டியில் வெற்றியீட்டுவோருக்கு சான்றிதழ்களும் மற்றும் பரிசில்களும் வழங்கப்படவுள்ளன.

இந்தப் போட்டியானது சமூக மற்றும் சுகாதாரம் பற்றிய வினாக்களைக் கொண்டதாக அமையும் என்று சுகாதாரப்பகுதி அதிகாரி ஒருவர் தெரிவித்தார் (ம-10)

## இளைஞர்கள் விடுவிப்பு

யாழ்ப்பாணம், நவ 7

படையினரால் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டிருந்த இரு இளைஞர்கள் விசாரணைகளின் பின்னர் விடுவிக்கப்பட்டதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்துக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

காங்கேசன்துறை வீதியாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சகாதேவன் பாஸ்கரன் (வயது 21) என்பவர் 512 ஆவது படைப் பிரிவாலும்—

பயிலங்காடு ஏழாலை தெற்கைச் சேர்ந்த மாதன் செல்வம் (வயது 37) என்பவர் 511 ஆவது படைப்பிரிவாலும்— விடுவிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-10-9)


## மலிவு விலையில்

பல வர்ணங்களில்
சுவர் மாபிள்கள்
நில மாபிள்கள்
குளியலறை சாதனங்கள்
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள

**புதிய விமாகி**
27/3, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
(பஸ்தரிப்புக்கு முன்பாக)
[70565]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன் தீபாவளிச் சிறப்பு மலர்

மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது

உங்களுக்குத் தேவையான பழைய புதிய வீடியோப் படங்களைப் பெற்றுக்கொள்ள

**ஸ்ரோபன் வீடியோ சென்ரர்**

29/1, மருதடி, நல்லூர்,
யாழ்ப்பாணம். (70751)

## கவிதைப் போட்டி

கொழும்புகம்பன்கழகத்தின் ஏற்பாட்டில் அமரர் துரை விஸ்வநாதனின் ஞாபகார்த்தமாக பேச்சு மற்றும் கவிதைப் போட்டிகள் நாடளாவிய ரீதியில் நடத்தப்படவுள்ளன.

இப்போட்டிகளில் பங்குபற்ற விரும்புவோர் எதிர்வரும் 10ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். (க)

வாடிக்கையாளர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள்

அனைவருக்கும் இதயம் கனிந்த

**தீபாவளி நல்வாழ்த்துகள்**

# அஜந்தாஸ் ரெக்ஸ்ரைல்ஸ்

54, பெரியகடை, யாழ்ப்பாணம்.
T. P - 021 - 2899

# அஜந்தா ரேட்ஸ்

66, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (சி/9648)

வாடிக்கையாளர்கள், நண்பர்கள் அனைவருக்கும்

**தித்திக்கும் தீபாவளி வாழ்த்துகள்**

விண்ணோடும் மண்ணோடும்
இல்லாத வண்ணங்களை
பட்டோடும், நூலோடும்
அளிக்கிறது

# மகாநதி புடைவை அகம்

(முகூர்த்தப் பட்டுப் புடைவைகளுக்கு கைராசியான நிறுவனம்)

16, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

4, நவீன சந்தை,
சாவகச்சேரி.

சாறி பிளவுஸ் துணி வகைகளுக்கு பிரத்தியேக காட்சியறைகள்

16, நவீன சந்தை (மேல்மாடி),
யாழ்ப்பாணம்.
T. P. 2552

1, நவீன சந்தை (மேல்மாடி),
சாவகச்சேரி.

(சி/9654)

இணுவில் கிழக்கு

அன்னமார் கோயில் கட்டட நிதிக்காக நடத்தும்

ராகம்ஸ் இசைக்குழுவினரின்

# இன்னிசை கானங்கள்

இடம்: இராமநாதன் கல்லூரி, மருதனார்மடம்
காலம்: 7-11-99 இன்று தீபாவளி நாள் பி. ப. 2.30 மணி

அனைவரும் வருக வருக

(77054) — திருப்பணிச்சபை.

## வாழ்த்துகின்றோம்

1999 தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 160 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த

**செல்வன் சச்சிதானந்தம் கோபிநாத்**

அவர்களையும் அவரை வழிநடத்தி கல்வியறிவூட்டி உயர்வளித்த புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலய அதிபர் ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

திரு. சி. ஆனந்தராசா (அம்மப்பா)
ஆசிரியரும் குடும்பத்தினரும்
பெற்றோர்களும்.

உடுப்பிட்டி. (சி/9725)

[ விற்பனையாகிறது ]

## ( 2000 ஆம் ஆண்டுக்கான வண்ண வண்ணக் கலண்டர்கள் )

★ வியாபாரிகளே! உங்கள் வாடிக்கையாளர்களின் அன்பளிப்புக்கான கலண்டர்களுக்கு முந்திக் கொள்ளுங்கள்.

★ உங்கள் விருப்பத்திற்கேற்ப அச்சடித்தும் தரப்படும்.

**பூபாலசிங்கம் புத்தகசாலை**

இல, 4, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/9726)

சாவகச்சேரி

## ஸ்ரீதாஸ் பொழுதுபோக்கு விளையாட்டுக் கழகத்தினால்

31 - 10 - 99 இல் அதிர்ஷ்டம் பார்க்கப்பட்ட சீட்டிழுப்பின் விவரம்

1 ஆம் பரிசு – 3748
2 ஆம் பரிசு – 1216
3 ஆம் பரிசு – 0085

ஆறுதல் பரிசுகள்

1. 4122 2. 3138 3. 3275 4. 3401 5. 4662

அதிர்ஷ்டசாலிகள் தமது பற்றுச்சீட்டினை சாவகச்சேரி ஏ. கே. எஸ். மோட்டர்ஸ் அல்லது பிரபா சைக்கிள் வேக்ஸ் கடையில் சமர்ப்பித்து உறுதிப்படுத்தவும். பரிசளிப்பு விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

– செயலாளர்

(சி/9709)

## யஷோன் தொலைத்தொடர்பு நிலையம்

கண்டிவீதி, நுணாவில்,
சாவகச்சேரி

அன்பர்கள் வாடிக்கையாளர்களுக்கு தமது தீபாவளி வாழ்த்தைத் தெரிவித்துக்கொள்கின்றார்கள்.

உள்நாட்டு, வெளிநாட்டுத் தொடர்புகளை துரித கெதியில் பெறுவதற்கு மற்றுமோர் புதிய தொடர்பை இணைத்துள்ளார்கள்.

தொலைத் தொடர்பு எண். 070-212654.
வெளியூர், 094-70-212654,

எமது தொலைபேசிக் கட்டணங்கள்

| | |
|---|---|
| வெளியூர் அழைப்புக்கட்டணம் ரூபா | 100.00 |
| உள்ளூர் " | 5.00 |
| அழைப்புக் கட்டணம் | 3.00 |
| இந்திய அழைப்புக் கட்டணம் | 70.00 |

உள்ளூர் இல. 070-212349
070-212654

வெளியூர் இல. – 094-70-212349
094-70-212654

**YASON COMMUNICATION**

330, KANDY ROAD, NUNAVIL,
CHAVAKACHCHERI.

(70705)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி

யா/தெல்லிப்பழை சைவப்பிரகாச வித்தியாசாலையின்
முன்னாள் அதிபரும்
வலிகாமம் கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர்

**திருமதி கோகிலா மகேந்திரராஜா**
அவர்களின் அன்புத் தந்தையாருமாகிய

**திரு செல்லையா சிவசுப்பிரமணியம்**

அவர்களின் மறைவையொட்டி துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதிபர். ஆசிரியர்கள், மாணவர்கள்.

யா/தெல்லிப்பழை
சைவப்பிரகாச வித்தியாசாலை.

(7075?)

## 12 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு
09 — 11 — 1952

அழிப்பு
21 — 10 — 1987

**சோமசுந்தரம் யோகசுந்தரம்**
[முன்னாள் தபால்தந்தி ஊழியரும்
யோகாஸ் மினிபஸ் உரிமையாளரும்]

திதி: 07-11-99

பன்னிரண்டு ஆண்டுகளும்
பன்னிரண்டு யுகமாகலாம்
கடல் திடலாகலாம்
திடல் கடலாகலாம்
வானம் பூமி இரண்டும்
இடம் மாறலாம் – ஆனால்
உனது நினைவு மட்டும்
எமது மனதை விட்டு மறையாது!

" காதற்ற ஊசியும் வாராது – காணும்
கடைவழிக்கே "

– குடும்பத்தினர்.

'யோகா இல்லம்',
24/3, 2 ஆம் குறுக்கு வீதி,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.

[70743]

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்
1964 — 04 — 12

மறைவு
1999 — 10 — 08

அமரர்
**கனகசபை கவிதரன்**

தம்பி கவியே.....!

நாள்கள் முப்பது நகர்ந்தோடி மறைந்ததடா..!
நம்வாழ்வில் நின்நாமம் நிதமும் ஒலிக்குதடா...!
'கவி' என்றால் கடிகாரம் என்றாகினாய்– கொண்ட
கடமை விடேன் என்று நிதம் வாழ்ந்து காட்டினாய்
மாண்டனையோ மறைந்தனையோ சோதரனே!
'மக்கள் வங்கி' க்குன் கடமை போதுமென்று...!

ஆத்மா சாந்தியடைய என்றும் பிரார்த்திக்கிறோம்.

ஊழியர் நலன்புரிச் சங்கம்,
மக்கள் வங்கி,
பருத்தித்துறை (நெல்லியடி)

(705??)

## மூன்று பேருக்கு அபராதம்

யாழ்ப்பாணம், நவ. 7

உரும்பிராய், அச்செழுப் பகுதிகளில் கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனைகளில் ஈடுபட்டு வந்த பலர் கோப்பாய் பொலீஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில் மூவர் கடந்த வியாழனன்று யாழ். நீதிமன்றத்தில் மேலதிக நீதிவான் எஸ். ஏ. ஈ. ஏகநாதன் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர்.

மேற்படி குற்றச்சாட்டு தொடர்பாக நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டவர்களான அச்செழுவைச் சேர்ந்த யோசப் சிவபாக்கியம் என்பவருக்கு 40 ஆயிரம் ரூபா தண்டமும்—

சற்குணராசா சத்தியேஸ்வரி (உரும்பிராய்) என்பவருக்கு 20 ஆயிரம் ரூபா தண்டமும்—

தேவராஜன் சந்திரோதயன் (உரும்பிராய்) என்பவருக்கு 40 ஆயிரம் ரூபா தண்டமும் விதிக்கப்பட்டது.

தண்டப்பணம் செலுத்தத் தவறின் ஆறு மாதங்களுக்கு சிறைத்தண்டனை வழங்கப்படும் என்றும் நீதிவான் தெரிவித்தார்.

(ஐ–5)

## கேதாரகௌரி விரத முடிவு

கொழும்புத்துறை, நவ. 7

யாழ். குடாநாட்டில் உள்ள பெரும்பாலான ஆலயங்களில் இன்று ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் கேதாரகௌரி விரதத்தின் காப்பு அணிதல் விசேட அபிஷேக பூசையுடன் நிறைவு பெறும்.

(ம–30)

## 34 கசிப்பு வழக்குகள்

யாழ்ப்பாணம், நவ. 7

யாழ். மாவட்ட நீதிமன்றில் கடந்த இரு மாதங்களில் மட்டும் மதுவரித் திணைக்கள உத்தியோகத்தர்களினால் 34 கசிப்பு வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

கசிப்பு உற்பத்தி செய்தோர் மற்றும் விற்பனையாளர்கள் மீதே இந்த வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக மதுவரித் திணைக்கள உதவி ஆணையாளர் தெரிவித்தார்.

[ஐ–5]

## விவசாய வாய்க்கால் புனரமைப்பு

காரைநகர், நவ. 7

யாழ். மாவட்ட இளைஞர் சேவை மன்றத்தின் உதவியுடன் காரைநகர் சுப்பிரமணியம் வீதியில் அமைந்துள்ள ஒரு கிலோ மீற்றர் நீளமான விவசாய வாய்க்கால் திருத்த வேலைகள் இளைஞர் கழகங்களின் உறுப்பினர்களால் மேற் கொள்ளப்பட்டுள்ளன.

காரைநகர் சத்திரந்தை கலட்டி வாய்க்கால் குள வேலைகள் தற்போது நடைபெற்று வருகின்றன. சுமார் 60 இளைஞர், யுவதிகள் இவ்வேலைத் திட்டங்களில் உற்சாகமாக ஈடுபட்டு வருகின்றனர்..

இவ் வேலைத்திட்டங்களின் அவசியம் பற்றி ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் காரைநகர் கிராம உத்தியோகத்தர்கள் மற்றும் விவசாய சம்மேளன பிரதிநிதிகளின் வேண்டுகோளுக்கு இணங்க தீவுப்பகுதி இளைஞர் சேவைக்கழக உத்தியோகத்தர் க. நித்தியானந்தனின் முயற்சியினால் யாழ். மாவட்ட இளைஞர்சேவை மன்ற உதவிப் பணிப்பாளர் ரி. சிவதட்சணாமூர்த்தி தலைமையில் இந்த வேலைத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

(ஐ–73)


## மாபெரும் இசை நிகழ்ச்சி

கைதடி மத்தி வளர்மதி சனசமூக
நிலையத்தின் வளர்ச்சி நிதிக்காக
ஈழத்தின் முன்னணிப் பாடகர்களை
ஒன்றிணைத்து வழங்கும்

**அருணாவின் இசை மழை**

இடம்: கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயம்
காலம்: 07-11-1999 (ஞாயிறு) பி.ப. ஒரு மணி (S.L.T.)
இன்றைய தினம் அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பும் இடம்பெறும்.
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
உங்கள் பிரவேசம் :- 20 ரூபா மட்டும்.

விளம்பர உதவி:

**ஓம் முருகன் நகைமாடம்**
கைதடிச் சந்தி, கைதடி.

**சிறீ சச்சிதானந்தா**
**தொலைத் தொடர்பு சேவை**
கைதடி வடக்கு, கைதடி.
T. P. — 070 – 212515
0094 70 212515

**துரை போட்டோ**
**கருணா ஒலி ஒளி**
கைதடி தெற்கு, கைதடி.

(சி/9720)


## கண்ணீர் அஞ்சலி

எமது கழக பொறுப்பாசிரியர்
**திரு பொ. ஞானதேசிகன்**
அவர்களின் அன்புத் தந்தையார்
**திருவாளர் பொன்னம்பலம்**

அவர்கள் 04-11-1999 (வியாழக்கிழமை) அன்று காலமாகி விட்டார். அன்னாரின் பிரிவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

தமிழ்ச் சங்கம், யாழ். இந்துக் கல்லூரி.

(70758)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



மலர்வு
10 — 08 — 1933

உதிர்வு
08 — 10 — 1999

**திருமதி சண்முகம் சந்திரக்கண்டு**

திங்களொன்று சென்றதம்மா – உங்கள்
அன்பு முகம் காணாது
நெஞ்சமலர் வாடுதம்மா – உங்கள்
நேச மொழி கேளாது
நீங்கள் எமைப்பிரிந்தாலும் – உங்கள்
நினைவுகள் எம் நெஞ்சை விட்டு நீங்காது!

எமக்கு சகல வழிகளிலும் ஒத்துழைப்பு வழங்கியோருக்கு நன்றியைத் தெரிவிப்பதுடன் 7-11-99 இன்று இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

பிரிவினால் துயருறும்
அன்புக்கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்,

வடக்குத்தோட்டம்,
சமரபாகு,
வல்வெட்டித்துறை.

(சி/9696)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## இறைச்சிக்கோழி

Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் தட்டுப்பாடின்றி தினமும் காலை 7 மணி தொடக்கம் (பாதிக்கோழி உட்பட) சுகாதார முறைப்படி சுத்தம் செய்து பெற்றுக் கொள்ளலாம். நியாயமான விலை, நுட்பமான நிறுவை, சுறுசுறுப்பான சேவை அத்துடன் அடைமுட்டையும் உண்டு. 19, முருகேசர் ஒழுங்கை, (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), முத்திரைச் சந்தையடி, நல்லூர். (70523)

தீபாவளியை முன்னிட்டு மலிவு விலையில் நிறை கூடிய புறொயிலர் இறைச்சிக்கோழிகள் விற்பனை செய்யப்படுகின்றன. சுத்தம் செய்து கொடுப்பதுடன் பாதிக்கோழியும் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு:- இல. 40/6, புகையிரத கிழக்கு ஒழுங்கை, கந்தர்மடம். [ செல்வநாக பூஷணி அம்மன் கோயில் அருகில்] [70664]

இறைச்சிக்கோழி [Broiler] அத்துடன் இறைச்சிக்குகந்த கோழிகள் [ Gull Birds ] விற்பனைக்கு உண்டு. தினமும் சுத்தம் செய்து கொடுக்கப்படும். விரும்பிய நிறைகளில் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு:- இல. 68, பழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணம். [70766]

புறொயிலர் இறைச்சிக் கோழி விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு 37/2, கச்சேரி நல்லூர் வீதி, Blue Reban Hottel ] அருகில் யாழ்ப்பாணம். நியாயவிலையில் நிகர நிறையில் பெற்றுக் கொள்ளலாம். [70745]

இறைச்சிக்கோழி (Broiler) விற்பனைக்கு உண்டு. தினமும் சுத்தம் செய்து வேண்டிய நிறைகளில் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு:- இல. 15, 6 ஆம் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம். (சின்னக்கடை அருகில்) (70598)

இறைச்சிக்கோழி புறொயிலர் விற்பனைக்குண்டு. குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம். தீபாவளியை முன்னிட்டு காலை 6மணி தொடக்கம் மாலை வரையும் கிடைக்கும், வாடிக்கையாளர்களுக்கு விசேட சழிவு உண்டு. தொடர்பு: லக்கி மதவடி ஒழுங்கை, திருநெல்வேலி. [70632]

புறொயிலர் இறைச்சிக் கோழி விற்பனைக்கு உண்டு. தினமும் சுத்தம செய்து தேவையான அளவுகளில் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: இல. 40, கோயில் வீதி, யாழ்ப்பாணம். [70539]

**நரேன் வீடியோ**
ஸ்தாபனத்தாரின்
தீபாவளி
வாழ்த்துகள்
அனைவருக்கும்
உரித்தாகட்டும்!
எமது இன்றைய
வெளியீடு
சிவாஜி, கே. ஆர். விஜயா
நடித்த
**கல்தூண்**
நரேன் வீடியோ
140, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
T. P. 2675
(சி/9728)

## விற்பனைக்கு

பனை மரத்தினாலானரெலிபோன் பூத் விற்பனைக்கு உண்டு. விலை 6000/- தொடர்பு: ''யசோ'' இல. 185, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் [வின்சர் தியேட்டர் முன்பாக) [70768]

வீட்டுத்தளபாடங்களும் மின்சாரப் பாவனைப் பொருள்களும் வைத்திய சாலை உபகரணங்களும் மற்றும் எவர்சில்வர் பொருள்களும் குளிர்சாதனப் பெட்டிகளும் எம்மிடம் விற்பனைக்கு உண்டு. ஞாயிறு, திங்கள் [7-11-99,08-11-99] ஆகிய நாள்களில் மட்டும் தொடர்புகளுக்கு: இல 216, இலுப்பையடிச்சந்தி நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (70733)

150 D LAMBRETTA (ஸ்கூட்டர்) விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இ. பரமானந்தன் 18 A, சிவகுருநாதர் வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம். T.P. No. 3209 (70736)

நல்ல நிலையிலுள்ள Hondo 650 w ஜெனரேட்டரும் $2\frac{1}{2}$ வயது நிரம்பிய அல்சேஷன் ஆண் நாயும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: து. சிறீதரன், இல. 57, பிறவுண் வீதி. நீராவியடிச் சந்தி, யாழ்ப்பாணம், (70739)

தேநீர்க் கடைகளுக்கும், பேக்கரிகளுக்கும் பாவிக்கக் கூடிய சோக்கேஸ்கள் மற்றும் புத்தம் புதிய Lumala Sports 21 Gear Bike, விற்பனைக்குண்டு, தொடர்பு: சுரேன் (பிறிமியர்) பிரதான வீதி, யாழ்ப்பாணம். (70646)

ரிவி - வீடியோ டெக்குகள் ஓடியோ சாதனங்கள் HI - FI ஸ்பீக்கர்கள் (Pioneer) விற்பனைக்குண்டு. 13 A, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம். (வீடியோ விமல் அருகில்). (சி/9706)

JAPAN AKAI டெக் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி 87/1, பிரதான வீதி, யாழ்ப்பாணம். (யாழ். வீடியோ சென்ரர்) [70756]

## வீடு விற்பனைக்கு

ஹாட்லி, மெதடிஸ்த, வட இந்து மகளிர் கல்லூரிகளுக்கு அருகில் தம்பசெட்டி வீதி, பருத்தித்துறையில் அமைந்துள்ள மாடிவீடு விற்பனைக்கு உள்ளது. தொடர்பு கொள்ளும் முகவரி: M.P.C.S. தலைமைக்காரியாலயம்தம்பசெட்டி வீதி, பருத்தித்துறை (70623]

## மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம் 36 வயதுடைய சதய நட்சத்திர பெண்ணிற்கு மணமகன் தேவை. தகுந்த சீதனம் வழங்கப்படும். தொடர்பு: T.சிவஅருள்ஜோதி, அல்வாய் தெற்கு, அல்வாய். (70707)

## வீடு விற்பனைக்கு

இல. 75/2, கண்டி வீதி, சுண்டுக்குளியில் புதிதாகத் திருத்தி அமைக்கப்பட்ட காலியான நிலையில் உள்ள வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளும் முகவரி செ. சதாசிவமூர்த்தி 229, பருத்தித்துறை வீதி, ஆனைப் பந்தியடி. [சி/ 9663

## தவறிவிட்டது

28-10-99 வியாழன் அன்று அளவையர் பாடக் குறிப்புடன் முன் அட்டையில் பெயர் அல்லாத ஓர் அப்பியாசக் கொப்பி யாழ்ப்பாணத்தில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 87/1, பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் விலாசத்தில் தயவு செய்து ஒப்படைக்கவும். [70757]

## P.P.T. திருமண ஏஜென்சி

இந்து கௌரவ குடும்பத்தைச் சார்ந்த பிரான்சில் வசிக்கும் மணமகனுக்கும் (31 வயது அவிட்ட நட்சத்திரம் செவ். 7) மணமகள் மூல நட்சத்திரம் வயது 26 செவ். 12 பிரான்சில் வசிப்பவர், மணமகள் வயது 36 B.A. ஆசிரியை செவ். 12 சாதகக் குறிப்பு படப் பிரதியுடன் நேரில் சந்திக்கவும். P.T. பரம் அசம்பிளி சேச்அருகில், யாழ். வீதி, மானிப்பாய், [70691]

## சித்தி விநாயகர் சோதிடம்

சாதகம் எழுத தீர்க்கமான பலன் அறிய விவாக பொருத்தம் பார்க்க விவாக தாமதம் கிரக தோசத்திற்கு சரியான பரிகாரம் காண சகல விதமான யந்திரங்களுக்கும் நாடுங்கள்: கொழும்பில் 22 வருட அனுபவம் வாய்ந்த சோதிடர் விஸ்வப்பிரம்மஸ்ரீ மா. தங்கவேல் 9, டச்சு வீதி, சாவகச்சேரி. [70762]

## மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1963. மிருகசீரிடம்(4ம் பாதம்)கனடாவில் பிரஜா உரிமை பெற்ற(Computor Programmer) நிரந்தரத் தொழில் புரியும் அழகிய மணமகனுக்கு படித்த சிறந்த நற்குணமுள்ள அழகிய மணமகள் தேவை. உடன் படத்துடன் தொடர்பு கொள்ளவும். தொடர்புகளுக்கு: விள இல- 967 மே/பா- உதயன். (70712)

## O/L ENGLISH PAPER

0/L ஆங்கில வினாத்தாள் ஆசிரியர் திரு. K. சோமசுந்தரம். விலை 10/- கிடைக்குமிடம்: பூபாலசிங்கம், பஸ்நிலையம், யாழ்ப்பாணம். [70715]

## தேவை

நடக்க முடியாதவர்கள் பாவிக்கும் சக்கர நாற்காலி தேவை. விலை விவரங்களுடன் கீழ் காணும் முகவரிக்கு விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 968, மே/பா உதயன், கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (70713)

**தீபாவளி நல் வாழ்த்துகள்**
**ரெனி** மூக்குக் கண்ணாடி அகம்
**கண் பரிசோதித்து**
கண்ணாடி வழங்குபவர்
இல. 540, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
பிரதேச செயலகம் அருகில்
சாவகச்சேரி.
[சி/9701]

ஆறுபடை வீடுகளின்
**கந்த சஷ்டி கவசம்**
எல்லாப் புத்தகசாலைகளிலும்
பெற்றுக்கொள்ளலாம்.
வெளியீடு:
ஸ்ரீ சாயி கொம்பியூட்டர்
றோணியோ அச்சகம்
கே. கே. எஸ் வீதி, பூநாறி மரத்தடி
யாழ்ப்பாணம். (70771)

# கண்ணீர்ப் பூக்கள்

எமது கல்வி வலயத்தின் உதவிக்கல்விப்பணிப்பாளர்
திரு. சி. சுகுமார்
அவர்களின் அன்பு மாமியார்
**திருமதி கண்மணி சிவசுப்பிரமணியம்**
அவர்கள் சென்ற 30-10-1999 ஆம் திகதி கொழும்பில் சிவபதமுற்ற செய்தியை அறிந்து அனைவரும் ஆழ்ந்த கவலையை அவர்தம் குடும்பத்தாருக்குத் தெரிவிக்கும் வேளை எமது கண்ணீர்ப் பூக்களையும் சமர்ப்பிக்கின்றோம்.
**வலிகாமம் கல்வி வலய நலன்புரிக் கழகம்.**
மருதனார்மடம்.
(70747)

# 31ஆம் நாள் நினைவு அஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம் 01 — 05 — 1946



மறைவு 08 — 10 — 1999

அமரர் **அப்பாக்குட்டி கந்தசாமி**
(கிளை முகாமையாளர், ப. தெ வ. கூ. சங்கம், கிளிநொச்சி.)

அன்பின் சிகரமாய் குணத்தின் கோபுரமாய்
பாசத்திற்கு அணிகலனாய் பாரினில்
நீ இருந்தாய்
பொல்லாத வினைவந்து நீ பொன்னுலகம்
சென்றதனால்
அல்லும் பகலும் உம் நினைவால் வாடுகின்றோம்,

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
சகோதரன்.

திரு. க. இராஜேஸ்வரன்,
தவசிகுளம்.
கொடிகாமம். (70398)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

உதிப்பு 15 — 01 — 1950



மறைவு 20 — 10 — 1998

**திருமதி தவமணிதேவி குணலிங்கம்**

ஓராண்டு சென்றதம்மா ஒரு நொடிப் பொழுதில்
ஓராண்டு என்ன நூறு ஆண்டுகள் சென்றாலும்
மறப்பமோ உம் நினைவை
நீ இல்லாத சாந்தி நிலையத்தில்
சாந்தியும் இல்லை சந்தோஷமும் இல்லையம்மா!
உன் ஆத்மசாந்திக்காக இறைவனை வேண்ட
எங்களுக்கு அருகதையில்லையம்மா?
நீ இருக்கும் போது அவற்றை எல்லாம்
செய்துவிட்டாய்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

— குடும்பத்தினர்

கரணவாய் மத்தி,
கரவெட்டி. (70734)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டரங்கு

## மிட்சுஇ - ஜெசிபா வெற்றிக்கிண்ண

# இறுதி ஆட்டம் இன்று நடைபெறும்

### மட்டக்களப்பு . யாழ். அணிகள் மோதுகின்றன

யாழ்ப்பாணம், நவ. 07
மிட்சுஇ — ஜெசிபா வெற்றிக்கிண்ணத்துக்கான யாழ்ப்பாணம், திருகோணமலை, வவுனியா, மட்டக்களப்பு மாவட்ட அணிகள் பங்குபற்றும் 50 ஓவர்கள் கொண்ட மாபெரும் கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதி ஆட்டம் இன்று காலை 900 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமான இந்தச் சுற்றுப் போட்டியில் நடைபெற்ற 3 ஆட்டங்களிலும் வெற்றி பெற்று 6 புள்ளிகளைப் பெற்ற மட்டக்களப்பு மாவட்ட அணியும் நடைபெற்ற மூன்று போட்டிகளிலும் இரண்டு ஆட்டங்களில் வென்று 4 புள்ளிகளைப் பெற்ற யாழ். மாவட்ட அணியும் இன்றைய இறுதி ஆட்டத்தில் மோதவுள்ளன.

இன்று விளையாடவுள்ள மட்டக்களப்பு மாவட்ட அணி விவரம் வருமாறு:

பி. பகீரதன் (அணித் தலைவர்), ஏ. ஜெயசித் (உதவி அணித் தலைவர்), யு. ஆர். ஜெயசீலன், எஸ். தனபாலன், பி. ரமணன், எஸ். கிருபானந்தன், ஆர் கௌதமன், எம். மனோசங்கர், எஸ். ரமேஷ்காந்த், எஸ். எம். கோபி, எஸ். ராஜபவன்.

யாழ் மாவட்ட அணி விவரம் வருமாறு:

கே. சசிகரன்( அணித் தலைவர்), ஏ. எஸ். நிஷாந்தன் (உதவி அணித்தலைவர்) எஸ் எஸ். பாஸ்கரன், வி.பி. சுபாஸ்கரன், பி. சஞ்சீவ், எஸ். சிவராஜா, ஆர். சுதர்ஷன், என். சுதேஸ் குமார், எஸ். சபாநந்த். எஸ். முரளிதரன், ஏ. ரி. கௌரிபாகன், பிரகாஷ்.

மழை காரணமாக யாழ். மத்திய கல்லூரி மைதானம் ஆட்டத்திற்கு தகுதியற்றுப் போனால் ஆட்டம் யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் இடம்பெறும் என யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கத் தலைவர் எஸ். ரஜீவன் அறிவித்துள்ளார்.

இன்றைய ஆட்டத்தில் பிரதம விருந்தினராக யாழ். அரசாங்க அதிபர் க. சண்முகநாதன் கலந்துகொள்வார்.

(இ-8-4)

## கூடைப்பந்தாட்டம்

யாழ்ப்பாணம், நவ. 07
யாழ். ஹற்றன் நஷனல் வங்கியால் பாடசாலைகள், கழகங்கள் ஆகியவற்றுக்கிடையில் நடத்தப்படும் கூடைப் பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் யாழ் மத்திய கல்லூரி மைதானத்தில் இன்று நடைபெறும் ஆட்டங்களில் பங்கு பற்றும் அணிகளின் விவரம் வருமாறு:

★ மாலை 3 30 மணிக்கு: பற்றீஸியன் வி. க. 'கோல்ட்' அணி எதிர் ஓல்ட் கோல்ட்ஸ் வி. க. 'ஏ' அணி.

★ மாலை 4.30 மணிக்கு: பற்றீஸியன் வி. க. 'கிறீன்' அணி எதிர் ஓல்ட் கோல்ட்ஸ் வி. க. 'பி' அணி. (இ-4)

## மென்பந்து கிரிக்கெட்

அரியாலை மத்தி இளைஞர் கழகம் தனது இரண்டாம் ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தும் 7 பேர் பங்குபற்றும் 12 ஓவர்கள் கொண்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் கனகரத்தினம் ம ம வி. மைதானத்தில் இன்று நடைபெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

★ காலை 9.00 மணிக்கு— கலைமகள் வி க. 'பி' அணி எதிர் இளந்தென்றல் வி க.

★ காலை 11.00மணிக்கு— விக்ரம் வி. க. எதிர் ஸ்புட்னிக் வி. க. (இ-4)

### இந்துப் பேரவை...

(2 ஆம் பக்கத் தொடர்)

வுக்கு வழிவகுக்கும்.

அந்தவகையில் ஈழவளத் திருநாட்டில் பசுவதை மேலோங்கித் தர்மநெறிகள் நலிவுற்று இனப்பூசல்களாலும் கொடுமைகளாலும் யுத்தத்தினாலும் உயிரினங்கள் அனைத்தும் துன்பசாகரத்தில் மூழ்கியிருக்கும் இருள் சூழ்ந்த இவ்வேளையில் நாட்டில் மீண்டும் தர்மநெறிகள் கடைப்பிடிக்கப் படவும். கொடுமைகளும் யுத்தமும் நின்று சமாதானம் நிலை பெறவும் விசேடமாக வன்னியிலும் ஏனைய இடங்களிலும் அகதிகளாகி அல்லலுறுவோர் [illegible] திருநாளில் பிரார்த்திப்போமாக.

[ஐ]


## 85% எமக்கு வாடிக்கையாளரின் வாக்கு!

கடந்த 10 வருடகாலமாக சுவையான நாவிற்கு சுவை ஊட்டிய

### ஜோ. எகட்டன் ஜெசித்தாரா

வழங்கும் அதிவிசேட சலுகை உணவுப் பெட்டிகளில்
கோழிப் புரியாணி, கோழி நூடில்ஸ்
கோழி (f)பிறைட்றைஸ், கோழிலாம்பறிஸ்
ரூபா 75 மட்டுமே
முன் பதிவு செய்பவர்களுக்கு முதல் இடம்
தாமதம் மேலும் தாமதம் ஆகும்.

ஜோ. எகட்டனின் "ஜெசித்தாரா"
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன்ஒழுங்கை.
சுண்டுக்குளி.
2000 யுகத்தில் புது உருவம்

(சி/9689)


## 31 ஆம் நாள் நினைவலைகள்

செல்வி **அன்னராணி சபாரட்ணம்**
(யாழ். மாநகர சபை உத்தியோகத்தர்)

ஓரடி மண்ணில்
14-08-1952

ஆறடி மண்ணில்
07-10-1999

பாவையுன் இன்னுயிர் கருகி நீங்கள்
சாவை அணைத்த சேதி எமக்கு
நோவின் மேல் நோவாய்
பூவை எரித்த தீயின் அனலாய் .........
சுடர்ந்து வேகின்றன எம்மிதயங்கள்
கண்ணீர் கலந்த பாவால் அஞ்சலிக்கின்றோம்
கடவுளை மன்றாடியபடி உங்கள் ஆத்மா சாந்தியடைய.

## மூன்றாம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம்
19
—
07
—
1947



மறைவு
07
—
11
—
1996

திருமதி **புவனேஸ்வரி அம்பலவாணர்**
(எழுதுநர், சுகாதாரப் பகுதி, யாழ். மாநகரசபை)

ஆண்டுகள் பல சென்றிடினும் உங்கள் அன்பையும், பாசத்தையும் அரவணைப்பையும் நினைந்து தவிக்கின்றோம்.

இந்நாளில் உங்கள் ஆத்மா சாந்தியடைய கடவுளை வேண்டுகிறோம்.

கணவர், தாய,
பெறாமக்கள், பேரப்பிள்ளைகள்.

48, ஓட்டுமடம் வீதி,
யாழ்ப்பாணம்.

[70765]

# எதிரொலி...

- இடியன் -

● காணாமற் போனோர் தொடர்பான உண்மை நிலையை இம்மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் வெளியிடாவிட்டால், சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கப்போவதாகத் தெரிவிக்கும் மகஜர் ஒன்று, காணாமற் போனவர்களின் பெற்றோர் சங்கத்தினரால் ஜனாதிபதிக்கு அனுப்பப்பட்டுள்ளதாம்!

★ **காணாமற் போகின்றவற்றின் பட்டியலில் அந்த மகஜர் இடம்பெறாமலிருக்க வேண்டுமே!**

● புலிகளுடன் பேச்சு நடத்தாவிட்டால், சமாதானம் என்பது கனவே என்கின்றார் ஜோஸப் பரராஜசிங்கம்!

★ **கனவிலே திளைப்பதற்குக் கனபேர் விரும்புகின்றார் களே!**

● ஐந்து நிபந்தனைகளின் அடிப்படையில் ஜனாதிபதியை ஆதரிக்கப்போவதாகக் கூறிய முஸ்லிம் காங்கிரஸ் பின்னர், நிபந்தனையற்ற ஆதரவு வழங்கத் தீர்மானித்துள்ளது!

★ **நிபந்தனைகளை ஏற்காவிட்டால், அல்லது முதலில் ஏற்றுக்கொண்டு பின்னர் அவற்றை நிறைவேற்றாவிட்டால் என்ன செய்வது என்பதை நினைத்துக் குழம்பிவிட்டார்களோ?**

● ஜனாதிபதித் தேர்தலில் தான் வெற்றி பெற்றால் இரண்டு மூன்று மாதங்களுள் இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதாகப் பொதுக்கூட்டமொன்றில் உறுதியளித்த சந்திரிகா, பி. பி. சி. பேட்டியில், 2000 ஆம் ஆண்டு முடிவதற்கு முன்னர் தீர்வு காணப்படும் எனச் சொல்லியுள்ளார்!

★ **வாக்குத் தடுமாறுகிறதா? அல்லது நோக்கு, தளம்புகிறதா?**

● நாடாளுமன்ற அமர்வில், அரச எம். பிக்கள் கட்டாயம் சமுகம் தர வேண்டும் என அமைச்சர் பத்திரன அறிவித்துள்ளார்!

★ **''ஊக்குவிப்பு போனஸ்'' ஒன்றைக் கொடுத்தால் இப்படியான அறிக்கைகளை வெளியிட வேண்டிய அவசியம் ஏற்படாதே என்கின்றார் பின்வரிசை எம். பி ஒருவர்.**

● பிரபாவுடன் பரிமாறிய கடிதங்களை ஜனாதிபதி வெளியிடவேண்டும் என ஐ. தே. க. பொதுச் செயலர் வலியுறுத்துகின்றார்!

★ **புலிகளை நம்பமுடியாது என்பதுதான் அரசின் நிலைப்பாடு; ஆகவே அத்தகையவர்களுடன் பரிமாறப்பட்ட கடிதங்களை வெளியிடவேண்டியதில்லை என ஜனாதிபதி சமாளிக்க முயலலாம்!**

● தன் தந்தையின் உயிரைக் காப்பாற்றுமாறு நவாப் ஷெரீப்பின் மகன் இந்தியப் பிரதமரைக் கோரியுள்ளார்!

★ **பகைவனுக்கருள்வாய் — நன்னெஞ்சே பகைவனுக்கருள்வாய்.**

● யாழ்ப்பாணத்திற் தயாரிக்கப்படும் பனஞ்சாராயம் கொழும்பில் அதிக அளவில் விற்பனையாகின்றதாம்!

★ **தினையளவு பருகினாலும் பனையளவு பயன் கிடைப்பதுதான் காரணமோ?**

# சமரில் உயிரிழந்த மேலும் புலிகளின் விவரம் அறிவிப்பு

வவுனியா, நவ. 7
ஒட்டுசுட்டான் — நெடுங்கேணிப் பகுதியில் இடம் பெற்று வரும் 'ஓயாத அலைகள் 3' நடவடிக்கையின் போது உயிரிழந்த விடுதலைப் புலிகளின் மேலும் 20 பேரின் விவரங்களை விடுதலைப்புலிகள் நேற்று வெளியிட்டுள்ளனர்.

அவர்களின் விவரம் வருமாறு:-

★ ஆதங்கன் —(முத்துஉமா கணேஸ்வரன் — வன்னி மாவட்டம்)

★ வல்லவன் — (செல்வரத்தினம் கதீஸ்வரன் — யாழ்ப் பாணம்)

★ ஆரூரான் — (செல்லத் துரை பத்மறஞ்சன் — கிளிநொச்சி)

★ மேஜர் அமலன் —(மயில் வாகன் சுரேஸ் — விசுவமடு)

★ அகன் — (மாசர் புஸ்பராணி — யாழ்ப்பாணம்)

★ அகன்குயில் — (மாரிமுத்து வானபேபி — யாழ்ப் பாணம்)

★ அருள்நிலா —(குமரகுருபரன் ஜெயரஞ்சினி — யாழ்ப் பாணம்)

★ அகிலா — (அம்பிகைபாகன் சித்திரா — யாழ்ப் பாணம்)

★ வேணி — (பொன்னம்பலம் தில்லை நடேஸ்வரி — யாழ்ப்பாணம்)

★ சிட்டுக்கிளி — (பாலசுப்பிரமணியம் ஜெயலக்ஷ்சுமி — மாங்குளம்)

★ புதியவள் அல்லது அகமதி - (வடிவேல் ஜீவிதா — கிளிநொச்சி)

★ யாழினி - (தங்கராஜா ராஜலக்ஷ்சுமி — கிளிநொச்சி)

★ குட்டியழகி - (அந்தோனிப்பிள்ளை பிரதீபா

(16ம் பக்கம் பார்க்க)

## DEEPEST SYMPATHIES

DEAR
### KOKILA MAHENDRAN

Deep in our hearts we mourn the sudden demise of both your beloveds. Let their souls attain 'SHANTHI'' by Rejoicing on their efforts that they have left this soil with the satisfaction that a worthy successor is there to fulfill their tasks unfinished.

**Wholistic Health Centre**

(சி/9741)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஸ்ரீசெல்வா சினிமா**

ஸ்ரான்லி' றோட்,
யாழ்ப்பாணம்.

தினசரி 10-30 2-30
(பழையநேரம்)

சரத்குமார், விஜயகாந்,
மோகினி நடித்த

**தாய்மொழி**

சினிமாப்பிரியர்களுக்கு
தீபாவளி வாழ்த்துக்கள்

(70783)


## கௌரி காப்பு வழங்கல்

யாழ்ப்பாணம், நவ. 7

கல்வியங்காடு இலங்கை மனோன்மணி அம்பாள் கோயிலில் திருகோணமலை ஸ்ரீபத்திரகாளி அம்மாள் ஆலயத்தில் இருந்து பெறப்பட்ட கேதாரகௌரி காப்பு இன்று காலை 10 மணிக்கு விஷேட பூசையின் பின் வழங்கப்படவுள்ளது.

(க)

## சமரில் உயிரிழந்த...

(15 ஆம் பக்கத் தொடர்)

யாழ்ப்பாணம்)

★ சசி— (இராசரத்தினம் சுகந்தினி— யாழ்ப்பாணம்]

★ அருளன் — (நந்தகோபாலன் துஷ்யந்தன் — யாழ்ப்பாணம்)

★ கபிலன் — (சிதம்பரப்பிள்ளை ஜெயராசா — திருமலை)

★ தங்கம் — (தேவராசா தேவரஞ்சினி — வண்னேரிக்குளம்)

★ கப்டன்மதிவதனன் அல்லது — திருவருள் கோபால் இராமச்சந்திரன்–கொழும்பு)

★ கலாதீபன் — (அன்னை பூபதி பவளானந்தன் — மட்டக்களப்பு)

★ சர்வானந்தன் — (சின் பூத்தம்பி ஜெகதீசன் — மட்டக்களப்பு) (ஐ-க)

## 5 ஆவது...

(முதலாம் பக்கத் தொடர்)

றப்பட்ட 100 சதுர கிலோ மீற்றர் பிரதேசம் போன்றவை விடுதலைப் புலிகளினால் ஐந்து நாள் சண்டையில் மீட்கப்பட்டுள்ளன என்றும் புலிகளின் குரல் வானொலி தெரிவித்தது.

(இ-5)

## புளியங்குளம்...

[முதலாம் பக்கத் தொடர்]

பட்டதாக லண்டனில் உள்ள புலிகளின் தலைமையகம் நேற்று அறிவித்திருந்தது. எனினும் நேற்று இரவு ஒலிபரப்பான புலிகளின் குரல் வானொலி இதனை ஊர்ஜிதம் செய்யவில்லை. பெரும் சண்டை நடப்பதாகவே தெரிவித்தது. புலிகளின் தாக்குதலை முறியடிப்பதற்காக படையினர் புளியங்குளம் நகரில் முன்னரங்க நிலைகளை அமைத்து போரிட்டு வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அதேசமயம் மாங்குளம், கனகராயன்குளம், புளியங்குளம் பகுதிகளில் உள்ள படையினர் போர் தந்திரோபாய பலப்படுத்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர் என்று பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமைச் செயலகம் நேற்று மாலை வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அங்கு நிலை கொண்டுள்ள படையினர் தமது முன்னணி நிலைகளைப் பலப்படுத்தி வருகின்றனர். படையினர் தமது படையணிகளுடன் சேர்ந்து தற்காலிக பாதுகாப்பு நிலைகளைப் பலப்படுத்தி வருகின்றனர்.

இராணுவ நடவடிக்கைக்கு ஏற்றதாக அப்பகுதிகளுக்கு மேலதிகமாக புதிய படையணிகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்றும் நடவடிக்கைத் தலைமையகம் தெரிவித்தது. (இ-கி-3)

## சிப்பாய்...

[முதலாம் பக்கத் தொடர்]

டும் ஒரு இலட்சத்து 72 ஆயிரம் ரூபா பணம் கொள்ளையிடப்பட்டதாகவும்—

இவ்வாறு வேறு சில கடைகளிலும் பணம் கொள்ளையிடப்பட்டதாகவும் — அவர் மேலும் தெரிவித்தார்.

அதேசமயம்— போர்முனையில் இருந்து வந்த சிப்பாய்கள் பலர் தமக்கு உண்பதற்காக உணவு மற்றும் மாற்றுடைகளை வவுனியா நகரக் கடைக்காரர்களிடம் இருந்து பெற்றுக் கொண்டதாகவும் —

சிலர் தமது ஊர்களுக்குப் பிரயாணம் செய்வதற்கான பணத்தை வர்த்தகர்களிடம் இருந்து பெற்றதாகவும்— வவுனியா செய்திகள் தெரிவிக்கின்றன. (இ-6-5-164)

## கப்பல்சேவை...

[முதலாம் பக்கத் தொடர்]

கேசன்துறைக்கு அனுப்பப்படுவர் என்றும்—

நாளை லங்கா முடித்த கப்பல் மூலம் திருகோணமலைக்கு அழைத்துச் செல்லப்படுவர் என்றும்— சிவில் நிர்வாக அதிகாரி மேலும் தெரிவித்தார்.

(இ-3-6)


**JAFFNA DISTRICT**
**Cricket Association**
**MITSUI - JEISHEBA TROPHY**
INTER DISTRICT
**Cricket Tournament - 1999**

FINALS
Batticaloa District
Vs
Jaffna District

CHIEF GUEST:
Mr. K. Shanmuganathan
(District - Secretary / Government Agent
Jaffna)

07 - 11 - 99 SUNDAY 9.00 a. m.
JAFFNA CENTRAL COLLEGE
GROUNDS

D. MATHIYALAGAN
Actg. Secretary,
J. D C. A.

(கி/9753)



எமது புதிய
வீடியோ
CD வெளியீடு

முதல் எச்சரிக்கை
பிரமிட் வீடியோ CD
சின்னஜெந், ரேவதி
சின்னப்புள்ளை
கல்லூரி வாசல்

★ புதிய போஸ்ரர் & விற்பனைக்குண்டு.

**விஷ்ணு வீடியோ & ஓடியோ ஸ்பொட்**

K. K. S. ROAD,
கோண்டாவில்.

(70782)



அன்பர்கள், நண்பர்கள்
அனைவருக்கும்
தீபாவளி
நல்வாழ்த்துகள்

எமது புதிய
வீடியோ
வெளியீடுகள்

K. R. விஜயா
நடித்த
சிவ லீலை
(பக்திப்படம்)

"சுப்பஸோவின்"
▶ காட்சியும் கானமும் VOL-08
(புதிய படங்கள் அடங்கலாக)
▶ புதிய ஒளியும் ஒலியும்

**சுப்பஸோ வீடியோ**

149, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(கி/9752)



எமது வாடிக்கையாளர்களுக்கும் பாவனையாளர்களுக்கும்
எங்களது மனமார்ந்த

**தீபாவளி நல்வாழ்த்துகளை**

தெரிவித்துக்கொள்கின்றோம்.

**வி. எஸ். எஸ்.**
**சாப்பாட்டு நல்லெண்ணெய்**

தயாரிப்பாளர்கள்:
வ. ச. சுந்தரலிங்கம்,
சோமசுந்தரம் வீதி, ஆனைக்கோட்டை.
தொலைபேசி இல. 021 – 2975

(70517)



எமது
தீபாவளி வாழ்த்துக்கள்

**சிந்து திரையரங்கம்**

உரும்பிராய்ச்சந்தி.

இன்று மூன்று காட்சிகள் காண்பிக்கப்படும்.

9-30 காட்சி
கமல் - பிரபு நடித்த
வெள்ளி விழா

12-30 காட்சி
ரோஜா - ரகுமான் நடித்த
அதிரடிப்படை

3-30 காட்சி
அருண்பாண்டியன் - ராம்கி
நடித்த
இணைந்த கைகள்.

(சி/9754)



**வாழ்வின் துயரங்கள் தொலைந்து புத்தொளி பிரகாசிக்க**
**வாடிக்கையாளர்கள் நண்பர்கள் அனைவருக்கும்**

★ **எமது இனிய தீபாவளி வாழ்த்துகள்** ★

**ஜெசிபா ஏஜென்சி**
**JEISHEBA AGENCY**

GENERAL HARDWARE MERCHANTS

AGENT FOR:
MITSUI CEMENT [Tokyo Cement Company]
S - Lon Pipes
C. I. C PAINTS

யாழ். நகரில் சரியான அளவுகளில் தரமான கட்டடப் பொருள்கள் (Steel & MITSUI CEMENT)
அனைத்தும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ளக் கூடிய ஸ்தாபனம்

132, ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம்.

(சி/9731)

T. Phone: 2407


இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) [illegible] 361 ஆம் இலக்கத்திலுள்ள [illegible] 07 11 - 1999 இல் [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org